பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி 15 செவ்வாய்க்கிழமை (31-10-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:271

### கடைஎரிப்பு, மோதல்கள் தொடர்கின்றன

# மலையகத்தின் பல பகுதிகளுக்கும் நேற்றுக் கலவரம் பரவியது!

## ஹற்றன், கினிகத்தேனை, டிக்கோயா, தலவாக்கொல்லையில் பகல்நேர ஊரடங்கு

ஹற்றன்,ஒக்ரோபர்31

**தலவாக்கொல்லையில் ஞாயிற்றுக்கிழமை மூண்ட இனக்கலவரம் நேற்று மலையகத்தின் மற்றும் பல பகுதிகளுக்கும் பரவியது. ஹற்றன், கினிகத் தேனை, டிக்கோயா, கொட்டகலை ஆகிய இடங்களிலும் கடை எரிப்பு மற்றும் இரு தரப்பு மோதல்களும் நேற்று இடம்பெற்றன. அதனால் அப்பிர தேசங்களில் நேற்று நண்பகல் 12 மணிக்குப் பின்னர் - பகல்வேளை ஊரடங்கு அமுல் செய்யப்பட்டது.**

**தலவாக்கொல்லை, கினிகத்தேனை ஆகிய பகுதிகளில் மோதல்களும் வன்முறைகளும் உச்சக்கட்டத்தை அடைந்ததாக அறியவருகிறது.**

பண்டாரவளை, விந்துனுவெவ புனர்வாழ்வு தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்ட தமிழ் இளைஞர்கள் கொன்று குவிக்கப்பட்ட அட்டூழியத் தைத் தொடர்ந்து -

மலையகத்தின் பல பகுதிகளி லும் இனக்கலவரம் மூண்டுள்ளது. தலவாக்கொல்லையில் முதலில் ஆரம்பித்த மோதல்கள், கடை எரிப்பு மற்றும் வன்முறைகள் நேற்று மேலும் பல இடங்களுக்கும் பரவின. குறிப்பாகக் கினிகத்தேனையில் நேற் றுப் பெரும் கலகம் இடம்பெற்றது.

கினிகத்தேனையில சிங்களவருக் குச் சொந்தமான கடைகளும், தமிழ ருக்குச் சொந்தமான கடைகளும் மாறி மாறி இரு தரப்புகளாலும் தீக் கிரையாக்கப்பட்டன; சூறையாடப்பட் டன.

போக்குவரத்துக்களைத் தடை செய்யும் வகையில் வீதிகளுக்குக் குறுக்கே மரக்குற்றிகளும், கருங்கற் களும் போடப்பட்டிருந்தன.

நாவலப்பிட்டிக்கும் ஹற்றனுக் கும் இடையில் அமைந்துள்ள கினி கத்தேனையில் போக்குவரத்துச்சபை யின் இரண்டு பஸ்களும், தனியாருக் குச் சொந்தமான இரண்டு மினி பஸ் களும், மற்றும் ஒரு வானும் குண்டர்

(10ஆம் பக்கம் பார்க்க)

## நுவரெலியாப் பகுதியில் படையினர் குவிப்பு

### பொலீஸ் நிலையங்களுக்கு உஷார் உத்தரவு

கொழும்பு,ஒக்.31

நுவரெலியா மாவட்டத்தில் ஏற்பட் டுள்ள கலவர நிலையையடுத்து பெரும்எண்ணிக்கையில ராணுவத்தி னரும் விசேட அதிரடிப்படையினரும் அங்கு குவிக்கப்பட்டுள்ளனர்.

பொகவந்தலாவ மகாவித்தியால யத்தில் விசேட முகாம் அமைத்து அவர்கள் தங்கியுள்ளனர். மலையகத் தில் உள்ள சகல பொலீஸ் நிலை யங்களும் உஷார் நிலையில் வைக் கப்பட்டுள்ளன.

கலகங்களை அடக்குவதற்காக விசேட அதிகாரங்கள் பொலீஸா ருக்கு வழங்கப்பட்டுள்ளன.

கலவரங்கள் பரவாமல் இருப்ப தற்காக ஊரடங்குச் சட்டத்தைத் தொடர்ச்சியாக அமுல் செய்ய வேண் டும் என்று கோரப்பட்டுள்ளது.

(இ-3)

## மட்டக்களப்பில் நாளை ஹர்த்தால்

மட்டக்களப்பு,ஒக்.31

பண்டாரவளைத் தடுப்பு முகாமில் தமிழ் இளைஞர் படுகொலை, மலைய கத்தில் தமிழ் மக்கள் தாக்கப்பட்டமை ஆகிய சம்பவங்களுக்கு கண்டனம் தெரிவித்து மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் நாளை புதன்கிழமை மாபெரும் கண்டன ஊர்வலம் நடத்த ஏறபாடாகி உள்ளது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## சுவரொட்டிகளை அடுத்து கடைகள் மூடப்பட்டன

### புறக்கோட்டையில் சம்பவம்

கொழும்பு,ஒக்.31

கொழும்பு புறக்கோடடையில் சில பகுதிகளில் நேற்றுக் காலை கடைகள் பூட்டப்பட்டிருந்தன.

பண்டாரவளைத் தடுப்பு முகாம் மீதான தாக்குதல்களைக் கண்டித்து வர்த்தக நிலையங்களை மூடுமாறு அங்கு காணப்பட்ட சுவரொட்டிகளை அடுத்தே கடைகள் மூடப்பட்டன.

வர்த்தகமையமான நாலாம், ஐந்தாம் குறுக்குத் தெருக்களில் உள்ள கடைகளில் பெரும்பாலானவை மூடப்பட்டிருந்தன.

வியாபாரத்துக்காக வந்த வெளியூர் வர்த்தகர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர். எனினும் பிற்பகலில் கடைகள் திறக்கப்பட்டன. (இ-3-8)

## மட்டக்களப்பு, வவுனியா, மன்னார்ப் பகுதிகளில் நேற்று பூரண ஹர்த்தால்

வவுனியா,ஒக்.31

பண்டாரவளை தடுப்பு முகாமில் நடத்தப்பட்ட தாக்குதலைக் கண் டித்து மட்டக்களப்பு,வவுனியா,மன் னார் ஆகியமாவட்டங்களிலும் மூதூ ருக்குக் கிழக்குப் பகுதியில் உள்ள தமிழ்க்கிராமங்களிலும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பில் பொதுமக்கள் ஏற்பாடு செய்த ஹர்த்தால் காரண மாக சகல பணிகளும் ஸ்தம்பிதம் அடைந்தன.

பாடசாலைகள்,அரச அலுவல

(10ஆம் பக்கம் பார்க்க)

## நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி



குடாநாட்டு மக்களின் அவல வாழ்வை உலகுக்கு அம்பலப்படுத் தும் புனிதமான பத்திரிகைப் பணியில் துணிச்சலுடன் ஈடுபட்டு, மிரட்டல் களுக்கு அடிபணியாமல் கடமைக்காகத் தன் உயிர் ஈந்த சகோதரப் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் இளம் குடும்பத்துக்கு குடாநாட்டின் சமூகத்தின் சார்பில் தினைத்துணையேனும் கைம்மாறு செய்யும் ஒரு முயற்சியை 'உதயன்' ஆரம்பித்திருக்கின்றான் என்ற செய்தியை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

பத்திரிகைப் பணிக்காக தனது குடும்பத் தலைவனையே பறிகொ டுத்த அந்த இளம் குடும்பத்துக்கு குடாநாட்டுச் சமூகம் தனது பங் களிப்புமிக்க ஒத்துழைப்பை வழங்கி வருகிறது.

★ உதவி நிதியை நேரில் 'உதயன்' பணிமனையில் பணமாகக் கையளிப்போருக்கு உடன் பற்றுச்சீட்டு வழங்கப்படுகிறது.

(9ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நான்காம் மாடியில் வைத்து சந்திரசேகரன் விசாரிக்கப்படுகிறார்!

### அசம்பாவிதங்களுக்கு காரணமாக இருந்ததாக குற்றச்சாட்டு

கொழும்பு,ஒக்.31

நுவரெலியா மாவட்டத்தில் சில பிரதேசங்களில் இடம்பெற்ற சம்ப வங்கள் தொடர்பாக மலையக மக் கள் முன்னணித் தலைவரும், நுவரெ லியா மாவட்ட ஐ.தே. கட்சி நாடாளு மன்ற உறுப்பினருமான பெரியசாமி சந்திரசேகரன் கொழும்பு நான்காம் மாடியில் வைத்து விசாரிக்கப்படுகி றார்.

ஜனாதிபதி விடுத்துள்ள விசேட உத்தரவுக்கு அமைய அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என நேற்றிரவு அரசு அறிவித்தது.

தலவாக்கொல்லையில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து நேற்று அதிகாலை 1.30 மணியளவில் குற் றப்புலனாய்வுப் பிரிவினால் விசாரணைக் காக அவர் அழைத்துச் செல்லப்பட் டுள்ளார் என்றும் -

கொழும்பு நான்காவது மாடியில் வைத்து குற்றப்புலனாய்வுப் பிரிவின ரால் அவர் விசாரிக்கப்படுவதாகவும் -

ஓரிரு தினங்களில் அவர் விடுவிக் கப்படுவார் என்றும் - பிரதமர் ரத்ன சிறி விக்கிரமநாயக்கா ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்காவி டம் தெரிவித்திருந்தார்.

சந்திரசேகரனை விடுவிக்கக்கோரி தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ரணில் கேட்டதற்கே அவர் இப்படிக் கூறினார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

### ஊரடங்கு நீடிப்பு

கொழும்பு,ஒக்.31

நுவரெலியா மாவட்டத்தில் நேற் றுப் பிற்பகல் 3 மணிக்கு அமுலுக்கு வந்த ஊரடங்குச்சட்டம் இன்று காலை 6 மணிவரை நீடிக்கும் என தகவல் திணைக்களப் பணிப்பாளர் ஆரியருபசிங்க அறிவித்துள்ளார்.

(இ-8)

### புலிகளின் தாக்குதலை அடுத்து படையினர் ஷெல் வீச்சு

மட்டக்களப்பு,ஒக்.31

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனைப் பொலீஸ் நிலை யத்துக்கு அருகில் கடமையில் இருந்த பொலீஸார் மீது நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய துப்பாக்கிப் பிரயோ கத்தில் கான்ஸ்டபிள் ஒருவர் காயம டைந்தார்.

காயமடைந்த பொலீஸ் கான்ஸட பிளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்ற அம்புலன்ஸ் மீது உகணை யில் வைத்து அன்றிரவு 8.45 மணி யளவில் விடுதலைப்புலிகள் நடத் திய மற்றொரு தாக்குதலில் பொலீஸ சாரதி உயிரிழந்தார். ஐந்து பொலீ

(10ஆம் பக்கம் பார்க்க)

## 10 இளைஞர்களின் சடலங்கள் ஆஸ்பத்திரியில் ஒப்படைப்பு

மட்டுவில் வடக்கில் நேற்று முன் தினம் படையினர் மேற்கொண்ட இரா ணுவ நடவடிக்கையின் போது இடம் பெற்ற சண்டையில் உயிரிழந்த தாகத் தெரிவித்து பத்து இளைஞர் களின் சடலங்கள் பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இரவு ஐந்து சடலங்களும் -

நேற்று பிற்பகல் ஐந்து சடலங் களும் - ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்தச்சடலங்களை விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளிடம் இன்று கையளிப்பதற்காக செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அதிகாரிகள் நேற்று ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

(இ-3-5-10-15-139-173)

## இயற்றாலைப் பகுதியில் மோட்டார் தாக்குதல்!

### மூன்று படையினர் உயிரிழப்பு

கொழும்பு,ஒக்.31

தென்மராட்சியில் இயற்றாலைப் பகுதியில் அமைந்துள்ள படையின ரின் முன்னரங்க நிலைகள் மீது நேற்றுமுன்தினம் பிற்பகல் 4.45 மணி யளவில் விடுதலைப்புலிகள் நடத் திய மோட்டார்த் தாக்குதலில் மூன்று படையினர் உயிரிழந்தனர் என்று விசேட ஊடகத்தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

அதேதினம்,மட்டுவில் வடக்கில் புதிதாகக் கைப்பற்றிய பகுதிகளில் படையினர் நடத்திய தேடுதலில் விடுதலைப்புலிகளின் 18 உறுப்பினர் களின் சடலங்களையும் -

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

உடுவில் கிளையைச் சேர்ந்த
காங்கேயன் பேக்கரி உரிமையாளர்

**திரு.கி.பரமகுருநாதன்**

அவர்களின் தந்தையார்

**தம்பிஜயா கிருபைரட்ணம்**

அவர்களின் மரணச் செய்தி கேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மாவட்டம்
பேக்கரி உரிமையாளர் சங்கம்.

## துயர் பகிர்கின்றோம்

27.10.2000 அன்று இறைபதம் அடைந்த எமது
கல்லூரியின் ஆங்கில ஆசிரியர்

**திருமதி லோகேஸ்வரி இராஜசேகரம்**

அவர்களின் மறைவையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்,ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலைச் சமூகம்,
யா/வடஇந்து மகளிர் கல்லூரி,
பருத்தித்துறை.

(C/13638)

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் சிவலிங்கம் நவநீதகிருஷ்ணன்**

**(ஓய்வு பெற்ற இறைவரி உத்தியோகத்தர்)**

எங்கள் பாடசாலை அதிபர்

திருமதி **மாலினிதேவி வேதநாதன்** அவர்களின்

அன்புச் சகோதரரான

**சிவலிங்கம் நவநீதகிருஷ்ணனின்**

**மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

ஆசிரியர்கள், மாணவர்கள்,
*யா/கொக்குவில் மேற்கு சி.சி.த.க.*
*பாடசாலை.*

(80061)

## கண்ணீர் அஞ்சலி

**இந்துநாகரிக சிறப்புக்கலை இறுதிவருட மாணவியும்**
**இந்து மன்றத்தின் உப செயலாளருமாகிய**

செல்வி **தயாளினி** அவர்களின்

அன்புத் தந்தையார்

**சி.நவநீதகிருஷ்ணன்** அவர்கள்

**இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் அவர்தம் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.**

இந்து மன்றம்,
*யாழ்.பல்கலைக்கழகம்.*

(80057)

## இதய அஞ்சலிகள்

**எமது சிரேஷ்ட மாணவன் ந.கங்காதரனின்**
தந்தையார்

அமரர் **சி.நவநீதகிருஷ்ணன்**

**அவர்களுக்கு**

**எமது இதய அஞ்சலிகளைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கின்றோம்.**

இந்துவின் மைந்தர்கள்,
முதலாம் வருடம்,
முகாமைத்துவ கற்கைகள், வர்த்தகபீடம்,
*யாழ்.பல்கலைக்கழகம்.*

(80051)

## தவறுக்கு வருந்துகின்றோம்

**28-10-2000 பத்திரிகையில் (பக்கம் 6) வெளியாகிய கண்ணீர் அஞ்சலி விளம்பரத்தில கனகசபை மனோராணி என்ற பெயர் கனகசபை மனோகரி என தவறுதலாக பிரசுரமாகிவிட்டது. தவறுக்கு மன்னிக்கவும்.**

மொடேண் ஸ்ரோர்ஸ்,
நெல்லியடி.

(80050)

# அறுவருக்கு பிணை அனுமதி

யாழ்ப்பாணம்,ஒக்.31

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் ஆறு பேர் நேற்று யாழ்.நீதிமன்றத்தினால பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பிணையில் விடுவிக்கப்பட்டவர்களின் விவரம் வருமாறு:-

கனகசபை இராசலிங்கம் (இணுவில்), சிதம்பரேஸ்வரன் யோகநாதன் (இணுவில் கிழக்கு சுன்னாகம்), வைரமுத்து சிவகணேசநாதன் (உரும்பிராய் கிழக்கு), இவரது மனைவியான சிவகணேசன் சறோஜினி மற்றும் தர்மலிங்கம் விஜயக்குமார் (கந்தர் மடம்), தம்பு தம்பிராசா (சுன்னாகம்) ஆகியோரே இந்த அறுவரும் ஆவர்.

இவர்கள் ஒவ்வொருவரும் தலா 10 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் ஒவ்வொரு மாதமும் வரும முதலாம் மூன்றாம் திங்கட்கிழமைகளில நீதிமன்றப் பதிவாளர் முன்னிலையில் வந்து கையொப்பம் இடுமாறும் உத்தரவிடப்பட்டது. (இ-5-ரி)

### மாணவருக்கு பாராட்டு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.31

தாலிக்கொடி ஒன்றைக் கண்டெடுத்து உரியவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்த மாணவர் ஒருவரை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பாராட்டி கௌரவிக்க உள்ளது.

மகாஜனக் கலலூரியைச் சேர்ந்த இராஜரட்ணம் குணசீலன் என்பவரே இந்த மாணவர் ஆவார்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை தேசிய கல்வியியற் கல்லூரியில் இந்த வைபவம் நடைபெற இருப்பதாக தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி தி.கமலநாதன் தெரிவித்தார். (இரி)

### அனுமதி பெறாத கடைகள் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.31

வலிகாமம் மேற்குப் பகுதியில் உள்ள அனுமதி பெறாத கடைகள் உடனடியாக மூடப்பட வேண்டும் என்றும் இது சம்பந்தமாக கடைகளின் உரிமையாளர்கள் வலிகாமம் மேற்குப்பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் வலிகாமம் பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் தெரிவித்துள்ளார்.

கோயில்கள், பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள் போன்றவற்றுக்கு அருகில் அமைந்துள்ள வீடியோ கடைகள் உடனடியாக அகறறப்பட வேண்டும் என்றும் இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும அவர் மேலும் கூறினார். (இ-ரி)

### செல்லச்சாமி கோரிக்கை

தொழிற் சங்கத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பி.சந்திரசேகரனை கைது செய்துள்ளமை விவேகமான ஒரு நடவடிக்கை அல்ல. அவரை உடனடியாக விடுவிக்க வேண்டும்.

இவ்வாறு இலங்கைத் தேசிய தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ்.செல்லச்சாமி கோரியுள்ளார்.

கொழும்பில் நேற்றுக் காலை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

இவ்வாறான கைதுகள் மலையகத்தில் அமைதியை ஏற்படுத்தப் போவதில்லை. மலையகத்தில் ஏற்பட்டுள்ள மக்கள் கொந்தளிப்பைத் தணிக்க அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-8)


**ராஜா**
**(யாழ்ப்பாணம்)**
**விஜய், ஜோதிகா, விஜயகுமார்** மற்றும்
பலரின் நடிப்பில்
**குஷி**
காட்சிகள்:
10.30, 2.00 (பு.நே.)
(C/13401)

**நாகம்ஸ்** சுன்னாகம்
**கார்த்திக், கௌசல்யா, ஹீரா, அப்பாஸ்** நடித்த
**பூவேலி**
(ரீல்ஸ்)
காட்சிகள்- 11.00, 2.30 (பு.நே).
01-11-2000 முதல்
அஜித், சிம்ரன்
நடித்த
**வாலி**
(C/13603)


## ஊர்காவற்றுறை பிரதேச சபை
## கூரைத்தகடுகளுக்கான கூறுவிலை அறிவித்தல்

ஊர்காவற்றுறை பிரதேச சபைக்குத் தேவையான 8 அடி நீளமான யானைமார்க் அல்லது காண்டாமிருகமார்க் கூரைத் தகடுகள் 450 முதல் 500 வரை (லொறியில் ஏற்றி விடுவதற்கான கூலி உட்பட) வழங்குவதற்கான கூறுவிலைகள் 08-11-2000 ஆம் திகதி முற்பகல் 12.00 மணிக்கு முன்னர் 'செயலாளர் ஊர்காவற்றுறை பிரதேச சபை'க்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கு.கணேசலிங்கம்**
*செயலாளர்,*
*ஊர்காவற்றுறை பிரதேச சபை.*

(C/13636)

# மரண அறிவித்தல்கள்

## முத்துக்குமாரு நடராஜா (செட்டியார்)

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் ஆறுகால் மடத்தை வசிப்பிடமாகவும கொண்ட முத்துக்குமாரு நடராஜா நேற்று முன்தினம் (29-10-2000) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் லட்சுமியின் அன்புக் கணவரும் சண்முகரட்ணம், தங்கவேல் (பட்டு), செல்வரெத்தினம் (முருகன்), சுகந்தாதேவி, கமலாதேவி, கலாதேவி, வசந்தாதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (31-10-2000) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் தகனக் கிரியைக்காக கோம்பையன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
**ந.செல்வரெத்தினம் (மகன்)**
**(முருகன்)**

*ஆறுகால் மடம்,*
*மானிப்பாய் வீதி.*

(80059)

## அப்பாத்துரை மழவராயன்

**(தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசன திணைக்களம் )**

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாத்துரை மழவராயன் களுவாஞ்சிக குடியில் நேற்று முன்தினம் (29.10.2000) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரபபடும்.

தகவல்:
**சு.வெற்றிவேலாயுதம்**
**(மைத்துனர்)**

*மயிலணி,*
*சுன்னாகம்.*

(80053)

## திருமதி அன்னலட்சுமி சிவசுப்பிரமணியம்

**(ஓய்வு பெற்ற ஆசிரியை - கோப்பாய்)**

கோப்பாய் வடக்கு வெள்ளெருவைப் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் தற்போது இல. 47, விஜயபா மாவத்தை, களுபோவிலயில் வசித்து வந்தவருமான முன்னாள் ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி அன்னலட்சுமி சிவசுப்பிரமணியம் அவர்கள் நேற்று முன்தினம் (29.10.2000) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

இவர் ஓய்வு பெற்ற ஆசிரியர் சிவசுப்பிரமணியம் அவர்களின் அன்புத துணைவியாரும்காலஞ்சென்ற திரு.திருமதி சுப்பையா அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி சின்னையா அவர்களின் மருமகளும், குசலகுமாரி (ஆசிரியை - கொழும்பு விவேகானந்தா கல்லூரி), இரவீந்திரன் (நியூசிலாந்து), மனோரஞ்சன் (ஜேர்மனி), குணசீலன் (லண்டன்), தயாபரன் (நியூசிலாந்து), ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக களுபோவிலயில் உள்ள ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இறுதிக்கிரியைகள் வியாழக்கிழமை நடைபெறும்

தகவல்:
**ம.அ. ஜீவநாதன்.**

**சிற்றி மெடிக்கல்ஸ்,**
**487, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(80062)

## ஆச்சிமுத்து அப்புக்குட்டி (தீவா)

ஆச்சிமுத்து அப்புக்குட்டி நேற்று (30-10-2000) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புக்குட்டியின் மனைவியும், வேலாயுதபிள்ளை (ராசா), சுப்பிரமணியம்(சின்னக்கிளி - மணி- பெயின்ரர்), தையல்நாயகி ஆகியோரின் அன்புத் தாயாரும் குஞ்சரம் (குணம்), அற்புதமலர், கனியூட்பெல்டானா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (31-10-2000) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு (பு.நே) வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்:-
**வேலாயுதபிள்ளை (ராசா)**
**(மகன்)**
**சுப்பிரமணியம் (மகன்)**
**(சின்னக்கிளி- மணி - பெயின்ரர்)**

*கடற்கரை வீதி,*
*நாவாந்துறை,*
*யாழ்ப்பாணம்.*

(80064)

## ஆழ்வான் முருகேசு

வளாகவீதி, கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த ஆழ்வான் முருகேசு நேற்று (30.10.2000) திங்கட்கிழமை காலமானார்.

இவர் சின்னாச்சியின் அன்புக்கணவரும், செல்லையா(சுவிஸ்), ஞானேஸ்வரி(தேவி-கனடா), மகேஸ்வரி(கொக்குவில்), தர்மலிங்கம், பூபாலு ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(31.10.2000) செவ்வாய்க்கிழமை பி.ப.2.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**மு.பூபாலு**
**(மகன்)**

*வளாகவீதி.*
*கொக்குவில் கிழக்கு.*

(80052)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்துவரும் நவம்பர் மாதத்தில் புலிகளின் தாக்குதல் தீவிரமடையும்

கொழும்பு,ஒக்.31

நவம்பர் மாதம் பிறப்பதோடு, மாவீரர் தினத்தை முன்னிட்டு விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் தீவிரமடையும் என எதிர்பார்க்கப் படுவதால் பாதுகாப்புப் படையினர் புதிய நெருக்கடிகளை - சவால்களை - எதிர்கொள்ள நேரிடும்.

'சண்டேரைம்ஸ்' பத்திரிகையின் பாதுகாப்புத் துறை விமர்சகர் இக்பால் அத்தாஸ் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப்புலிகள் நடத்தும் தாக்குதல்களை எதிர்கொள்வதிலேயே இப்போது ஈடுபட்டு வரும் பாதுகாப்புப் படையினர், புலிகளின் தீவிரப் படுத்தப்பட்ட தாக்குதலை தடுக்கும் விதத்தில் இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுக்க இயலுமா என்பதே அந்த சவால் என்றும் அவர் தமது பாதுகாப்பு நிலைவரம் தொடர்பான கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பண்டாரவளை தடுப்பு முகாம் படுகொலைகளுக்கு பழிவாங்கும் முகமாக விடுதலைப்புலிகள் தாக்குதல்களை' நடத்தக் கூடிய சாத்தியம் உள்ளதால் நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறார்கள்.

அதேவேளை -

விந்துனுவெவ படுகொலைகளை தொடர்ந்து பாதுகாப்பு படையினர் கட்டுமீறிச் செயற்படாமல் பார்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளையும் - பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் எடுத்து வருகிறார்கள் என்றும் அவர் தமது கட்டுரையில் தெரிவித்துள்ளார். (அ)

# உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் தேசிய முகாமைத்துவ கற்கை நெறி

வலிகாமம் தெற்கு,ஒக்.31

உயர் கல்வி அமைச்சின் ஓர் அங்கமான ஸ்ரீலங்கா உயர் தொழில் நுட்ப நிறுவனம், முகாமைத்துவ பதவி நிலை உத்தியோகத்தை வகிப்பதற்கு வாய்ப்பளிக்கக் கூடிய முறையில் உயர் தேசிய வணிக டிப்ளோமா கற்கைநெறியை (HNDC) உயர் தேசிய முகாமைத்துவக் கற்கை நெறியாக (HNDM) மாற்றி அமைந்துள்ளது.

ஜி.சீ.ஈ.உயர்தர வர்த்தகப் பிரிவில் ஒரே தடவையில் நான்கு பாடங்கள் சித்தியடைந்தவர்கள் உயர் தேசிய டிப்ளோமா முகாமைத்துவ கற்கை நெறியை பயில்வதற்கான வாய்ப்பு வடக்கு - கிழக்கு மாகாணத்தில் யாழ்ப்பாண உயர்தொழில் நுட்ப நிறுவனத்தில் மட்டுமே உண்டு. எனவே இந்தச் சந்தர்ப்பத்தை யாழ்ப்பாண மாணவர்கள் தகுந்த முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என யாழ்ப்பாணம் உயர் தொழில நுட்ப நிறுவன பணிப்பாளர் ரி.இராஜரட்ணம் தெரிவித்துள்ளார்.

நான்கு வருடங்களை கொண்ட இந்தக் கற்கைநெறியின் முதல் இரு வருடங்கள் எட்டுப் பாடங்கள் ஆங்கில மொழி மூலமும் எட்டுப் பாடங்கள் தமிழ் மொழிமூலமும் கற்பிக்கப் படும். 3 ஆம் 4 ஆம் வருடங்களில் அனைத்துப் பாடங்களும் ஆங்கில மொழியில் மட்டுமே கற்பிக்கப்படும்.

இந்தக் கற்கைநெறி தகவல் தொழில் நுட்பம், முகாமைத்துவம், பொருளியல், சட்டம், கணக்கியல், ஆராய்ச்சிமுறையியலும் கருச்செயற் றிட்டங்களும் ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.

உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமாக் தலைத் திட்டமும் பட்டயக் கணக்காளர் நிறுவனக் கலைத் திட்டத்துக்குக்கேற்ப 2001 ஆம் ஆண்டு முதல் மாற்றியமைக்கப்படுகிறது. இந்தச்சந்தர்ப்பத்தையும் யாழ்ப்பாண மாணவர்கள் சிறப்பாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் பணிப்பாளர் ரி.இராஜரட்ணம் தெரிவித்தார்.

நீடித்த காலக் கற்கை நெறியை மேற்கொள்ள வாய்ப்பு வசதியற்ற மாணவர்கள் தகவல் தொழில் நுட்பம், ஆங்கில, தமிழ் தட்டச்சு, ஆங்கில தகவல் தொடர்பாடல் போன்ற பாடப்புலன்களை உள்ளடக்கிய இரு வருட தேசிய வியாபார டிப்ளோமா-தேசிய நிதியியல் டிப்ளோமா பயிற்சி நெறிகளை பயிலும் வாய்ப்புக்களையும் பயன்படுத்திக் கொள்ளுமாறும்-

ஜி.சீ.ஈ. உயர்தர வணிக பிரிவில் ஒரே தடவையில் மூன்று பாடங்கள் சித்தியடைந்தவர்கள் கூட இரண்டு வருட தேசிய வியாபார டிப்ளோமா பயிற்சி நெறியை பயில வாய்ப்பு உண்டு எனவும் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (இ-152)

# பண்டாரவளைச் சம்பவத்தை புதுடில்லி கண்டிக்க வேண்டும்

## வை.கோ., ராமதாஸ் கூட்டாகக் கோரிக்கை

கொழும்பு,ஒக்.31

பண்டாரவளை புனர்வாழ்வு முகாமில் கோரமான முறையில் கொல்லப்பட்ட கொடூரச் செயலுக்காக ஸ்ரீலங்காவை இந்தியா கண்டிக்க வேண்டும்.

இவ்வாறு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலர் வை.கோபாலசாமியும், பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் ராமதாஸும் மேற்கண்டவாறு கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் அவைக் கூட்டத்தில் கலந்துகொண்ட வை.கோ. நேற்றுமுன்தினம் சென்னை திரும்பியதும் சென்னை விமானநிலையத்தில் செய்தியாளரைச் சந்தித்துப் பேசும்போது தமிழீழ தமிழர்களின் துயரங்களையும், பல்வேறு பிரச்சினைகளையும் உலக நாடுகள் உணரத்தக்கவகையில், தான் ஐ.நா.சபையில் உரையாற்றியதாக குறிப்பிட்டார்.

பண்டாரவளையில் கோரமான முறையில் தமிழ் இளைஞர்கள் கொலலப்பட்டுள்ளதை வன்மையாகக் கண்டிப்பதாகவும் இந்தப் படுகொலை குறித்து மத்திய அரசு ஸ்ரீலங்கா அரசை வன்மையாக கண்டிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராமதாஸ் வெளியிட்ட அறிக்கையிலும் மேற்படி சம்பவத்தை வன்மையாகக் கண்டித்திருப்பதுடன் இது குறித்து மத்திய அரசாங்கம் மௌனம் சாதிக்காது ஸ்ரீலங்கா அரசை கண்டிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ஐ-5-ரி)

# அரசமைப்புச் சீர்திருத்தத்தை விரைவில் சமர்ப்பிப்போம்

## திகதி குறிப்பிட முடியாது என்கிறார் ஜயரத்ன

அரசமைப்புச் சீர்திருத்தத்தை கூடிய விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்போம். ஆனால் திகதியை குறிப்பிட முடியாது என்று விவசாய அமைச்சரும், பொ.ஐ.முன்னணியின் பொதுச் செயலாளருமான டி.எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கத்துக்கு ஐக்கிய தேசியக்கட்சியின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்காக பிரதமர் ரட்னசிறி விக்கிரமநாயக்க அக்கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றார். அரசாங்கம் தயாரித்துள்ள அரசமைப்புச்சீர்திருத்தயோசனைக்கு ஐ.தே.கவின் ஆதரவைப் பெற்றுக் கொள்வது தொடர்பாகவே முக்கியமாக ஆராயப்படுகிறது.

அரசமைப்புச் சீர்திருத்தத்திற்கு ஆதரவு வழங்குவது தொடர்பாக பௌத்த பீடாதிபதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியபின் பதிலளிப்பதாக ஐ.தே.க. கூறியுள்ளது. புதிதாக நாடாளுமன்றத்திற்கு வந்துள்ள கட்சிகள் உட்பட அனைத்து சிறிய அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பையும் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அரசாங்கம் தேர்தல் விஞ்ஞானபனத்தில் முன் வைத்த யோசனைகளை அமுல்படுத்த துரித நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு ஜனாதிபதி சகல அமைச்சர்களுக்கும் பணிப்புரை வழங்கியுள்ளார் - என்று அமைச்சர் ஜயரத்ன மேலும் தெரிவித்தார். (ஐ-ரி)

# பொது வைபவங்களில் ஆடம்பரம் வேண்டாம்!

## கல்வி அமைச்சர் வேண்டுகோள்

கொழும்பு,ஒக்.31

தான் கலந்துகொள்ளும் பொது வைபவங்களில் தோரணம் கட்டுவது, மலர்மாலை அணிவிப்பது, மலர்ச் செண்டு வழங்குவது போன்றவற்றைத் தவிர்த்துக்கொள்ளுமாறு கல்வி அமைச்சர் சுனில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

இது குறித்த சுற்றறிக்கை ஒன்றை அவர் சகல திணைக்களங்களுக்கும் அனுப்பியுள்ளார். பொது வைபவங்களில் வெற்றிலை மட்டும் வழங்கினால் போதுமானது என்றும்-

வீண் ஆடம்பரங்களையும் அதற்காக விரயமாகும் நேரத்தையும் குறைத்துக்கொள்ளவுமே இந்த நடவடிக்கை என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஐ-8-20)

# பிரதமரின் வாசஸ்தலம் அலரிமாளிகைக்கு மாறும்?

கொழும்பு,ஒக்.31

பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் விரைவில் அலரிமாளிகைக்கு மாற்றப்படலாம என எதிர்பார்க்கப்படுவதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

பிரதமர் அலரிமாளிகைக்குச் சென்று குடியேறியதும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகைக்கு மாற்றிக கொள்வார் என்றும்-

அதில தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய அமைச்சர்களின் பதவியேற்பு வைபவம் இம்முறை ஜனாதிபதி மாளிகையிலேயே நடைபெற்றது. (ஐ-8-4)

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஒக்.31

குடாநாட்டிலிருந்து வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவிலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

### தெல்லிப்பழை

513/165632/A 513/165593/A
513/165593/B 513/158605/A
513/160535/A 513/158913/A
513/158913/B 513/158914/A
513/158914/B 513/158914/C
513/160895/B 513/160895/A
513/165916/A 513/165916/B
513/165865/A 513/165865/B
513/152538/A 513/161638/A
513/160637/A 513/160637/B
513/160637/C 513/160637/D
513/160637/E 513/164244/A
513/164244/B 513/158767/B
513/161682/A 513/161682/B
513/160644/A 513/160643/A
513/160643/B 513/161634/A
513/161634/B 513/165484/A
513/165866/A 513/165799/A
513/165799/B 513/165799/C
513/158767/A

### உடுவில்

513/165560/A 513/165560/B
513/165822/A 513/165822/B
513/161804/A 513/161804/B
513/161804/C 513/161804/D
513/160781/A 513/160781/B
513/165838/A 513/163903/A
513/165620/A 513/165620/B
513/165620/C 513/158688/A
513/158688/B 513/165893/A
513/165849/A 513/165900/A
513/164195/A 511/162935/A
511/162931/A 511/162931/B
511/162955/A 511/162941/A
511/162787/A 511/157277/A
511/157277/B 511/157277/C
511/157277/D 511/157277/E
511/157277/F 511/162786/A
511/163015/A 511/163015/B
511/163016/A 511/163017/A
511/163004/A 511/163004/B
511/162948/A 511/162948/B
511/162775/A 511/162775/B
511/162775/C 511/162814/A
511/162806/A 511/162806/B
511/162806/C 513/168930/B
513/168930/A 513/164267/A
513/168930/C 513/160903/A
513/165709/A 513/165709/B
513/165528/A 513/165528/B
513/165782/A 513/165782/B
513/165782/C 513/165782/D
513/165782/E 513/165782/F
513/165640/A 513/165640/B
513/165650/A 513/165650/B
513/165740/A 513/165740/B
513/165649/A 513/165649/B
513/165702/B 513/165917/A
513/164364/A 513/164364/B
513/164364/C 513/161517/A
513/161517/B 513/161517/C
513/161848/A 513/161556/A
513/161556/B 513/165595/A
513/165595/B 513/165755/A
513/164266/B 513/165482/A
513/163952/A 513/163952/B
513/164217/A 513/165840/A
513/165840/B 513/161636/A
513/161636/B 513/161636/C
513/166652/A 513/166652/B
513/165827/A 513/165860/A
513/165873/A 513/165873/B
513/165599/A 513/165599/B
513/164222/A 513/164222/B
513/166810/A 513/166810/B
513/166810/C 513/166810/D
513/165558/A 513/165658/A
513/164123/A 513/164238/A
513/161635/A 513/161635/B
513/161635/C 513/163928/A
513/141281/A 513/165889/A
513/165889/B 513/164213/A
513/164176/A 513/164176/B
513/161614/A 513/161614/B
513/161614/C 513/161614/D
513/166647/A 513/165778/A
513/166744/A 513/166744/B
513/166744/C 513/166744/D
513/166744/E 513/166743/A
513/166743/B 513/166743/C

### சங்கானை

513/147069/B 513/151845/A
513/158597/A 513/158597/B
513/158597/C 513/158597/D
513/158597/E 513/165699/A
513/165699/B 513/165699/C
513/165699/D 513/165783/A
513/165826/A

### சவாவகச்சேரி

511/162567/A 511/162567/B

### யாழ்ப்பாணம்

512/128754/A 512/159005/A
512/159005/B 512/161302/A
512/161302/B 512/161302/C
512/163269/A 512/163269/B
512/163426/A 512/163426/B
512/163456/A 512/163456/B
512/163456/C 512/163456/D
512/163456/E 512/163456/F
512/163456/G 512/163464/A
512/163465/A 512/163610/A
512/166078/A 512/166078/B
512/166078/C 512/166079/A
512/166082/A 512/166082/B
512/166093/A 512/166131/A
512/166132/A 512/166144/A
512/166145/A 512/166145/B
512/166151/A 512/166154/A
512/166154/B 512/166209/A
512/166266/A 512/166266/B
512/168445/A

### கோப்பாய்

511/136598/A 511/136598/B
511/149196/A 511/149196/B
511/149645/A 511/149645/B
511/149700/A 511/149700/B
511/149738/A 511/149760/A
511/149760/B 511/154330/A
511/154493/A 511/154493/B
511/154547/A 511/159548/A
511/159548/B 511/159718/A
511/159759/A 511/159759/B
511/159772/A 511/159772/B
511/159778/A 511/159778/B
511/159778/C 511/159802/A
511/159802/B 511/159807/A
511/159807/B 511/159836/A
511/159860/A 511/159860/B
511/159860/C 511/159869/A
511/162548/A 511/162548/B
511/162555/A 511/162568/A
511/162576/A 511/162576/B
511/162630/A 511/162663/A
511/162670/A 511/162670/B
511/162671/A 511/162671/B
511/162697/A 511/162697/B
511/162699/A 511/162699/B
511/162720/A 511/162721/A
511/162721/B 511/162731/A
511/163645/A 511/163653/A
511/163654/A 511/163654/B
511/163655/A 511/163656/A
511/163656/B 511/163673/A
511/167001/A 511/167001/B
511/167001/C 511/167009/A
511/167009/B 511/167023/A
511/167023/B 511/167023/C
511/167023/D 511/167028/A
511/167028/B 511/167028/C
511/167032/A 511/167032/B
511/167033/A 511/167033/B
511/167034/A 511/167034/B
511/167035/A 511/167035/B
511/167035/C 511/167035/D
511/167041/A 511/167041/B
511/167042/A 511/167042/B
511/167043/A 511/167043/B
511/167043/C 511/167056/A
511/167056/B 511/167056/C
511/167062/A 511/167062/B
511/167062/C 511/167062/D

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படையினரின் பாவனையில் உள்ள
# பாடசாலைக் கட்டடங்களை திருப்பித்தரக் கோரிக்கை

நெல்லியடி, ஒக். 31
பருத்தித்துறை பிரிகேட் பகுதிக்குள் படையினரின் பாவனையிலிருக்கும் இருபாடசாலைகளின் கட்டடங்களையும் மாணவர்களின் நலன் கருதி விடுவித்துத் தருமாறு பருத்தித்துறை நகரசபைத் தலைவர் வின்சன் கென்னடி பருத்தித்துறை 524 பிரிகேட் தளபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்பொழுது இடம்பெயர்ந்த மாணவர்களும், வடமராட்சியில் தஞ்சமடைந்திருப்பதனால் படையினர் நிலை கொண்டிருக்கும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, ஹாட்லிக்கல்லூரி ஆகிய இருபாடசாலைகளின் கட்டடங்களையுமே விடுவித்துத் தருமாறு கோரப்பட்டுள்ளது.

(ஐ-109)


## பஸ் நிலையம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 31
பருத்தித்துறை பஸ் நிலையப் பகுதியை மீண்டும் புனரமைப்புச் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கென 10 லட்சம் ரூபா பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இவ்வாண்டு இறுதியில் புனர் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் பருத்தித்துறை நகரசபைத் தலைவர் தெரிவித்தார்.

(ஐ 15)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## செல்லையா ஆனந்தராசா

மண்ணில்: 19-02-1934
விண்ணில்: 31-10-1997

அனைவரையும் அரவணைத்த தெய்வமே!
ஆண்டுகள் மூன்று மறைந்தாலும் ஆறவில்லை
நம் துயரம். அடைந்திடுக சாந்தி என
வேண்டி நிதம் துதிக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
- குடும்பத்தினர்.

லோட்டன் வீதி,
மானிப்பாய்.

(சி/13639)

# மரண அறிவித்தல்

## திரவியம் விஜயதரன் [விஜி]

(மெக்கானிக் — கோயில வீதி, இராசநாயகம் கராஜ)

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் முடமாவடி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திரவியம் விஜயதரன் (விஜி) 27-10-2000 வெள்ளிக்கிழமை அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரவியம் - தவமணிதேவி அவர்களின் அன்புப் புதல்வனும், முரளிதரன் (கொழும்பு, தாஜிணி ஜூவல்லறி, செட்டித்தெரு), பாபுதரன் (லண்டன்), சுபத்திரா ஆகியோரின் அன்புச் சகோதரரும், தயாளினியின், (கொழும்பு) மைத்துனரும் அபிணாவின் சிறிய தகப்பனாருமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் நாளை (1-11-2000) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:-
நா. ஜெகதீஸ்வரன் (வெள்ளை)
(ஒன்று விட்ட சகோதரன்)
சிவ் கொமினிக்கேசன்
தொ. பேசி எண். 021 - 2539

நிரந்தர முகவரி:-
வே. செல்லத்தம்பி (சமரக்கொடி),
நாவற்குழி,
கைதடி.

(80032)

# சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை. ஒக், 31
வட்டுக்கோட்டை வடக்கு பிரமனாச்சி தோட்டம் அருள்மிகு ஸ்ரீ கற்பகப்பிள்ளையார் கோயிலில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணியளவில் பூர்வபக்கம் சதுர்த்தித் திருவிழா விசேட அபிஷேகம், பூசை. ஆராதனை வழிபாடுகளுடன் நடைபெறும்.

தொடர்ந்து சுவாமி வீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார். (ஐ-30)

* * *

யாழ். குடாநாட்டில் உள்ள சகல சத்தோலிக்க ஆலயங்களிலும் நாளை புதன்கிழமை அனைத்து புனிதர்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

(ஐ-30)

வல்வை வயலூர் முருகப்பெருமான் தேவஸ்தான ஸ்கந்தஷஷ்டிப் பெருவிழாவை ஒட்டி 6 நாள்களும் தினமும் காலையும் மாலையும் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. மாலை பூஜையைத் தொடர்ந்து 4 மணி முதல் 5.15 மணிவரை சைவப்புலவர் வரணியூர் பி. கமலநாதனின் 'கந்தவேள் பெருமையும் கந்தபுராண மகிமையும்' என்ற தலைப்பில் சொற்பொழிவு நடைபெறுகிறது.

(ஐ-ரி)

* * *

ஸ்கந்தசஷ்டி விரதத்தை முன்னிட்டு சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தானத்தில் கந்தபுராணப் படிப்பு தினமும் நடைபெற்று வருகின்றது. திரு. சண்முகவடிவேல் தலைமையில் தினமும் காலை எட்டு மணி தொடக்கம் கந்தபுராணம் படிக்கப்பட்டுவருகிறது.

(ஐ-152)

* * *

வட்டுக்கோட்டை மேற்கு அருள்மிகு சின்னக்கதிர்காமம் முருகன் ஆலயத்தில் கடந்த சனிக்கிழமை முதல் ஸ்கந்த சஷ்டி திருவிழா ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தினசரி முற்பகல் 10 மணி தொடக்கம் எஸ். பண்டாரிநாதன், அ. முருகவேள் தலைமையில் கந்தபுராணப் படிப்பும், பயன் சொல்லல் நிகழ்வும் நடைபெற்று வருகின்றன.

நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 5 மணியளவில் சூரசங்காரத் திருவிழா இடம்பெறும். (ஐ-30

## இரு மாதங்களுக்கு முன்
# காணாமற்போன அ. அட்டை திருடனின் ஷேர்ட் பைக்குள்!

யாழ்ப்பாணம். ஒக். 31
இரு மாதங்களுக்கு முன் திருட்டுப்போன மாணவி ஒருவரின் விசேட அடையாள அட்டை திருடன் ஒருவனின் ஷேர்ட் பையில் இருந்து மீட்கப்பட்டது.

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

மீசாலையில் இருந்து இடம்பெயர்ந்து திக்கம் பகுதியில் வசித்துவரும் மாணவி ஒருவர் இருமாதங்களுக்கு முன் நெல்லியடியில் வசிக்கும் தனது உறவினர் வீட்டுக்குச் சென்ற சமயம் அடையாள அட்டை அடங்கிய கைப்பையைத் தனது சைக்கிள் கூடைக்குள் வைத்துவிட்டு உள்ளே இருந்தபோது, கூடையில் இருந்த கைப்பை அடையாள அட்டையுடன் காணாமற்போயிற்று.

பலமுயற்சிகள் மேற்கொண்டும் கிடைக்காது இருந்த இந்த அடையாள அட்டை, கடந்த வெள்ளிக்கிழமை உடுப்பிட்டியில் இடம்பெற்ற ஒரு வழிப்பறிச் சம்பவத்தில் ஊரவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்ட திருடன் ஒருவனின் ஷேர்ட் பையில் இருந்து மீட்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை உடுப்பிட்டிப் பகுதியில் தனியாகச் சென்ற பெண் ஒருவரின் கழுத்தில் இருந்த சங்கிலியை அறுக்க முற்பட்ட வேளை அப்பெண் கூச்சலிட்டதைத் தொடர்ந்து ஊர் மக்கள் கூடி அத்திருடனை மடக்கிப் பிடித்தனர்.

அவ்வேளையே அவனைச் சோதித்த போது அவனின் ஷேர்ட் பையில் இருந்து அறுந்த நிலையில் சங்கிலி ஒன்றும், மாணவியின் அடையாள அட்டையும் மீட்கப்பட்டன.

திருடனைப் பொலீஸில் ஒப்படைத்ததை அடுத்து அடையாள அட்டை உரிய மாணவியிடம் ஒப்படைக்கப்பட்டது. (இ-15)

## விபத்தில் இருவர் பலி

கொழும்பு, ஒக். 31
காலியிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த ஒட்டோ ஒன்றும் சொகுசு பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இருவர் உயிரிழந்தனர்.

நேற்று முன்தினம் காலை பாணந்துறையில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பாணந்துறை பொலீஸ் அதிகாரி தெரிவித்தார்.

## நோயாளர் கப்பல் சேவை

யாழ்ப்பாணம், ஒக் 31
எதிர்வரும் வியாழக்கிழமை இடம்பெறவிருந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் கப்பல் சேவை முன் கூட்டி நாளை புதன் கிழமை இடம்பெறவுள்ளதால், வியாழக்கிழமையன்று செல்வதற்காகப் பதிவு செய்த நோயாளர்களையும், அவர்களது உதவியாளர்களையும் நாளை காலை 7 மணிக்கு சமுகமளிக்குமாறு யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(இ-3-139)

## எழுதுநர் பரீட்சை

குருநகர், ஒக். 31
பொது எழுதுநர் சேவை அதிசிறப்பு வகுப்புக்குத் தரம் உயர்த்துவதற்கான போட்டிப்பரீட்சை எதிர்வரும் 4ஆம் 5ஆம் திகதிகளில் யாழ். வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலையில் நடைபெறும்.

இப்பரீட்சைக்குத் தோற்ற உள்ளவர்களுக்கான அனுமதி அட்டைகள் யாவும் கொழும்பு பரீட்சைத் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(இ-51)

## பரிசளிப்பு விழா

மானிப்பாய், ஒக். 31
ஆனைக்கோட்டை அ. மி. த. க. பாடசாலை பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் சி. நாகையா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகச் சண்டிலிப்பாய் உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. தனபாலசிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக தீவக வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. ராதாகிருஷ்ணன், தென் இந்தியத் திருச்சபையைச் சேர்ந்த வண. பிதா மைனசீலன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக ஓய்வுபெற்ற அதிபர் கா. நித்தியானந்தமும் கலந்து கொள்வர்.

(இ-3-90)

# கூட்டுறவு வளர ஊழியரின் முழுப் பங்களிப்பு அவசியம்

## கட்டடத் திறப்பு விழாவில் உரை

அரியாலை, ஒக். 31
கூட்டுறவுத்துறை மேலும் அபிவிருத்தியடைந்து சங்கம் இலாபத்தில் இயங்குவதற்கு கூட்டுறவுப் பணியாளர்கள் முழுமையான பங்களிப்பை வழங்கவேண்டும்.

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நடுவப் பணிமனை அமைந்துள்ள பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட சங்கத்தின் பொதுக் களஞ்சியக் கட்டடத்தைத் திறந்து வைத்து உரையாற்றியசங்கத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தப் பொதுக் களஞ்சிய கட்டடம் பல லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்டது.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது: [illegible] துறை ஓரளவு அபிவிருத்தியடைந்து வருகின்றது.

இந்த அபிவிருத்தியானது மேன்மேலும் பெருக வேண்டும். இதற்கு சகலரினதும் பங்களிப்பு முக்கியமானது. கதிரையில் வந்து இருந்து விட்டுப்போவதால் எந்தவித பிரயோசனமும் கிடையாது. சகலரும் ஒருமித்து இதை எவ்வாறு செயற்படுத்த வேண்டும் என்று திட்டமிடுவதே சிறந்த இலட்சியப் பாதைக்கு கூட்டுறவை முன்னெடுக்கும்.

எவ்வளவோ சிரமங்களுக்கு மத்தியில் தற்போதுமாதாந்த இடர்க்காலக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது. புதிய சம்பளத் திட்டத்தை வழங்குவதற்கு ஆளணி அங்கிகாரம் கிடைத்ததும் அவற்றை வழங்குவதற்கு நாம் தயாராகவே உள்ளோம். இவ்வாறு கொடுப்பனவுகளை வழங்கும் போது கூட்டுறவுச் சங்கம் நஷ்டத்தில் செயற்படுவதற்கு எவரும் இடம்கொடுக்கக் கூடாது என்று கூறினார்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் உரையாற்றுகையில்:—

இந்தச் சங்கத்திற்குச் சொந்தமான தனியான களஞ்சியம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டிருப்பதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். அத்துடன் கூட்டுறவுத்துறையை மேன்மேலும் அபிவிருத்தி செய்வதற்கு பணியாளர்கள் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும் என்று கூறினார்.

சங்கத்தின் இயக்குநர் சபை உறுப்பினர் சபா. தியாகராஜா பொதுமுகாமையாளர் மு சிவப்பிரகாசம் ஆகியோரும் கூட்டத்தில் உரையாற்றினர்.

கூட்டுறவுத்துறைப் பணியாளர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் விழாவில் கலந்து கொண்டனர்.

(ஐ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்ரேலில் எதிர்க்கட்சியுடன் சேர்ந்து கூட்டாட்சி அமைப்பதில் தோல்வி; எகுட் பராக் அரசு கவிழும் நிலை!

டெல்அவிவ், ஒக்.31



இஸ்ரேலியப் பிரதமர் எகுட் பராக்கின் கூட்டணி அரசு கவிழும் நிலை உருவாகியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

முன்னர் நாடாளுமன்றத்தில் தோழமைக் கட்சிகளின் ஆதரவில் பராக் ஆட்சியமைத்திருந்தார்.

காம்ப்டேவிட் பேச்சுக்களின் போது பராக் பலஸ்தீனர்களுக்கு அதிகம் விட்டுக் கொடுத்ததாகக் குற்றஞ் சாட்டி பலர் கூட்டணியிலிருந்து வெளியேறியதை அடுத்து கொண்டுவரப்பட்ட நம்பிக்கை இல்லாப் பிரேரணைகளை சிறுமதவாதக் கட்சிகளின் துணையுடன் தோற்கடித்து ஆட்சியை அவர் காப்பாற்றினார்.

இந்த நிலையில் பிரதான எதிர்க்கட்சியான லிகுட் கட்சியின் தலைவர் ஏரியல் ஷெரோனுடன் தேசியக் கூட்டரசாங்கம் ஒன்றை அமைப்பது குறித்து பராக் பேச்சு நடத்தினார். தேசிய அரசில் உத்தரவுகளைப் பிறப்பிக்கும் அதிகாரம் தனக்கு வழங்கப்பட வேண்டும் என ஷெரோன் கோரியதை பராக் மறுத்து விட்டதால் கூட்டரசாங்கம் அமைக்கும் முயற்சி தோல்வியடைந்துள்ளது. இதனை அடுத்து பராக் அரசு மீது நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டுவர எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளதாகவும், பிரேரணையை தோற்கடிக்க பராக் சிறு மதவாதக் கட்சிகளின் உதவிகளை நாடியுள்ளதாகவும் கூறப்படுகிறது. (ஒ-8-ரி)

## தனிநாடு உருவாகும் வரை போரராட்டம் தொடரும்!

### பலஸ்தீனத் தலைவர் அரபாத் உறுதி!

காஸா, ஒக். 31

கிழக்கு ஜெருசலேத்தைத் தலைநகராகக் கொண்ட சுதந்திர பலஸ்தீனம் உருவாகும் வரை பலஸ்தீனர்கள் போராட்டத்தைக் கைவிட மாட்டார்கள் என்று பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் அறிவித்துள்ளார். பேச்சுவார்த்தைகளில் முட்டுக்கட்டை ஏற்பட்டதை அடுத்தே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேற்குக் கரைப் பிராந்தியத்தில் இஸ்ரேல் படைகளுக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையே நடைபெற்று வரும் மோதல்கள் அரபாத்தின் மேற்கூறிய அறிவிப்பினால் மேலும் தீவிரமடையலாம் என்று அஞ்சப்படுகின்றது.

இதே சமயம்—

இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் உள்ள லெபனானின் பகுதிகளில் ஆயிரக்கணக்கான பலஸ்தீனப் பெண்கள் இஸ்ரேலியர்களுக்கு எதிராக நடத்திய பேரணியில் கலகங்கள் ஏற்பட்டதாகவும் மேற்குக் காஸாப் பகுதியில் நவிலத் நகரில் ஏற்பட்ட வன்முறைகளை அடுத்து இஸ்ரேலிய டாங்குகள் இயந்திரத் துப்பாக்கிகள் மூலம் தாக்கியதில் இரு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் —

தற்கொலைத் தாக்குதல்கள் உட்பட இஸ்ரேலுக்கு எதிரான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தப் போவதாக இஸ்லாமிக் ஜிகாத் என்ற பலஸ்தீன அமைப்பு தெரிவித்துள்ளது-

சமீபத்தில் இந்த அமைப்பு மேற்கொண்ட தற்கொலைத் தாக்குதலில் இஸ்ரேலியப் படை வீரர் ஒருவர் காயமடைந்தார்.



கடந்த 3 வருடங்களில் பலஸ்தீனத் தரப்பில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு தற்கொலைத் தாக்குதல்களில் குண்டுதாரியைத் தவிர வேறு எவரும் கொல்லப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## அபின் தயாரிக்கப் பயன்படும் பொப்பிச்செடி பயிரிடுவதற்கு ஆப்கானிஸ்தானில் தடைவிதிப்பு!

காபூல், ஒக். 31

அபின் ஹெரோயின் ஆகிய போதைப் பொருள்களை உற்பத்தி செய்ய உபயோகிக்கப்படும் மூலப்பொருளான 'பொப்பி' மலர்ச் செடிகள் ஆப்கானிஸ்தானில் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

ஆளும் தலிபான் இயக்கத்தின் அதிஉயர் தலைவரான முல்லாமொகமட் ஓமர் இதற்கான தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

தலிபான்கள் மேற்கொண்டு வரும் சமூகச் சீர்திருத்த நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகவே பொப்பிச் செடிகளுக்கு தடை விதிக்கப்பட்டதாகவும் —

சமீபத்தில் போதைப் பொருள்களை உற்பத்தி செய்யும் 25 தொழிற்சாலைகள் அழிக்கப்பட்டதாகவும் ஓமர் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானின் பொருளாதாரத்தில் போதைப் பொருள்கள் உற்பத்தி கணிசமான பங்கு வகிக்கிறது.

கடந்த வருடம் 4,600 தொன் பொப்பி மலர்கள் அறுவடையானதாகவும் —

இந்த ஆண்டு வரட்சியின் காரணமாக 3,275 தொன் அளவுக்கே உற்பத்தியுள்ளதாகவும் —

இதனாலேயே ஆப்கானிஸ்தான் நாணயமான அப்கானியின் டொலருக்கு எதிரான மதிப்பு மிகவும் குறைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (ஒ-8-ரி)

## வெடிமருந்து, போதைப்பொருள்களுடன் 8 பாகிஸ்தானியத் தீவிரவாதிகள் புதுடில்லி பொலீஸாரால் கைது!

புதுடில்லி, ஒக். 31

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் பாரிய வெடிகுண்டுத் தாக்குதல்களையும், குழப்பங்களையும் ஏற்படுத்தத் திட்டமிட்டிருந்த பாகிஸ்தானியத் தீவிரவாதிகளை டில்லிப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

8 தீவிரவாதிகள் டில்லி நகரில் மத்தியில் தங்கும் விடுதி ஒன்றிலிருந்து கைது செய்யப்பட்டதாகவும் அவர்களிடமிருந்து 16 கிலோ கிராம் ஆ. டி. எக்ஸ் வெடிமருந்தும், 50 கிலோகிராம் ஹெரோயின் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டதாகவும் டில்லிப் பொலீஸார் அறிவித்துள்ளனர்.

பிடிபட்ட ஹெரோயினின் மதிப்பு உள்நாட்டு விலையின் படி 50 கோடி ரூபா என்று தெரிவித்த பொலீஸார் —

போதைப் பொருளைக் கொடுத்து இளைஞர்களை வசப்படுத்தி அவர்கள் மூலம் நகரிலும், நாட்டின் பிறஇடங்களிலும் வெடிகுண்டுத் தாக்குதல்கள் உட்பட குழப்ப நிலையை உருவாக்கத் திட்டமிட்டிருந்ததாகவும் கூறினார்

இதற்கிடையில்

ராஜஸ்தானில் ஸ்ரீகங்கா நகர் மாவட்டத்தின் சர்வதேச எல்லைப் பகுதியில் இந்தியாவுக்குள் ஊடுருவ முயன்ற பாகிஸ்தானியர் ஒருவரை இந்திய ராணுவத்தினர் பிடித்ததுடன் அவரிடமிருந்து 5 கிலோ கிராம் வெடிமருந்தும் வெடிக்க வைக்கும் கருவியும் கைப்பற்றியுள்ளனர். (ஒ)

## மக்களை அடிமைகளாக்கும் மியான்மர் அரசுக்கு எச்சரிக்கை!

### உலக தொழிலாளர் அமைப்பு விடுத்தது

ஜெனிவா, ஒக். 31

மியான்மரில் இராணுவ ஆட்சியாளர்கள் பொதுமக்களை அடிமைப்படுத்திக் கட்டாய வேலைகளில் ஈடுபடுத்துவதை நிறுத்தாவிட்டால் அந்த நாட்டுக்கெதிராகச் சர்வதேச ரீதியில் தடைகள் கொண்டு வரும்படி ஐ. நாவைக் கோரப்போவதாக உலகத் தொழிலாளர் அமைப்பு எச்சரித்துள்ளது.

சுமார் 8 லட்சத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் இராணுவ ஆட்சியாளர்களால் திட்டமிட்டு அடிமைப் படுத்தப்பட்டுள்ளதாகவும் —

வெடிக்காத கண்ணிவெடிகள் வைக்கப்பட்டுள்ள இடங்களைக் கண்டுபிடிக்க இவர்கள் ராணுவத்தால் பயன் படுத்தப்படுவதாகவும் —

மேலும் பலர் தெரு ஓரங்களிலும் ரயில் பாதைகளிலும் மிகக் குறைந்த ஊதியத்துக்கு அல்லது ஊதியம் இல்லாமல் கட்டாய வேலைகளில் ஈடுபடுத்தப்படுவதாகவும்—

உலகத் தொழிலாளர் அமைப்புத் தெரிவித்துள்ளது.

கட்டாய வேலைத்திட்டங்களை முடிவுக்குக் கொண்டு வர மியான்மர் அரசுக்குக் கடந்த ஜூன் மாதம் 5 மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அந்த அமைப்பு கால அவகாசம் முடிவடைந்துள்ளதால் மியான்மருக்குத் தமது பிரதிநிதிகள் சென்று நிலைமையை அவதானிக்கப்போவதாகவும் —

கட்டாய வேலைகள் தொடர்ந்தால் சர்வதேச ரீதியான தடைகள் மியான்மர் மீது விதிக்கப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் கூறியுள்ளது. (ஒ-8-ரி)

## புகைப்பிடித்ததால் புற்று நோய்; சிகரெட் உற்பத்தியாளரிடம் நஷ்டஈடு கோரி மனுத் தாக்கல்!

கல்கத்தா, ஒக். 31

புகைப்பிடிப்போருக்கு புற்றுநோய்ப் பாதிப்பு ஏற்பட்டால் அதற்கு சிகரெட் தயாரிப்பு நிறுவனம் பொறுப்பேற்று நஷ்டஈடு தர வேண்டும் என்று இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கல்கத்தாவில் வசிக்கும் அசோக் பனர் ஜி என்பவர் புகைப்பிடித்ததினால் தனக்கு புற்றுநோய் பீடித்திருப்பதாகவும் —

தான் உபயோகித்த சிகரெட்டைத் தயாரித்த நிறுவனம் இதற்குப் பொறுப்பு என்றும் —

அதனால் அதனிடமிருந்து நஷ்டஈடு பெற்றுத்தர வேண்டும் என்றும் — கோரி கல்கத்தா நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவை விசாரணைக்கு ஏற்பது குறித்து நீதிமன்றம் இதுவரை முடிவு செய்யவில்லை என்று கூறப்படுகிறது.

அமெரிக்காவிலும், இத்தாலியிலும் சிகரெட்டால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு சிகரெட் தயாரிப்பு நிறுவனங்கள் நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று தீர்ப்புகள் அளித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## பீஹார் சிறைச்சாலையில் சுகபோகத்தில் கைதிகள்

### அதிகாரிகள் கண்டுபிடிப்பு

பாட்னா. ஒக் 3,1

இந்தியாவின் பீஹார் மாநிலச் சிறையில் நடத்தப்பட்ட திடீர்ச் சோதனையில், கைதிகளின் அறைகளில் இருந்து பெருமளவு போதைப் பொருள்களும், சிறைக்குள் அனுமதி மறுக்கப்பட்ட பொருள்களும் கைப்பற்றப் பட்டன.

பாட்னாவின் 'பியூர்க்' சிறைச்சாலையில் அரசியல் செல்வாக்குப் பெற்ற கைதிகள் சுகபோகங்களுடன் வாழ்வதாகக் கிடைத்த உளவுத் துறைச் செய்தியை அடுத்து பாட்னா மாவட்ட ஆட்சித் தலைவர் அமீத்வாரே தலைமையிலான அதிகாரிகள் குழு திடீர்ச்சோதனை நடத்தியது.

இச்சோதனையில், பிரபல ரௌடிகள் மற்றும் அரசியல் தொடர்புடைய கைதிகள் ஆகியோரில் சிறைக் கூண்டுகளில் இருந்து செலுலர் போன்கள், குளிர்சாதனப் பெட்டிகள், குளிர்காற்று சாதனங்கள், வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், மின்பிறப்பாக்கிகள் சமையல் எரிவாயு அடுப்புகள் போன்றவை கைப்பற்றப் பட்டதாகவும்—

சிறைச்சாலை வளாகத்தில் கஞ்சா உட்பட பல்வேறு போதைப்பொருள்கள் பெருமளவில் இருந்ததாகவும், அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

## எஸ்ரடோவுக்கு எதிராக விசாரணை

மணிலா, ஒக். 31

பிலிப்பைன்ஸ் அதிபர் ஜோசப் எஸ்ரடோ மீதான ஊழல் குற்றச்சாட்டுக் குறித்த விசாரணைகள் நவம்பர் மாதம் ஆறாம் திகதி தொடங்கும் என நாடாளுமன்றக் கூட்டுக்குழு அறிவித்துள்ளது.

சட்டவிரோதமாகச் சூதாட்டம் நடத்துபவர்களிடமிருந்து அதிபர் பல லட்சம் டொலர்களை லஞ்சமாகப் பெற்றுள்ளதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது (ஒ)

## பல்கேரிய அமைச்சர் இந்தியா விஜயம்

புதுடில்லி. ஒக். 31

பல்கேரியாவின் பாதுகாப்பு அமைச்சர் பொல்கனோயே தமது தூதுக்குழுவுடன் இந்தியா வந்துள்ளார்.

இவர் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணான்டஸைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

இந்தப் பேச்சுக்களில் இராணுவத் தளபாட விற்பனை முக்கிய இடம் வகிக்கும் என்று கருதப்படுகிறது. (ஐ — ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீட்டிழுப்பு முடிவுகள்

இமையாணன் மேற்கு
**விஸ்வகுல ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலய**
கட்டட நிதிக்காக 26–10–2000 அன்று
விஸ்வகுல இளைஞர் சங்கத்தால் நடத்தப்பட்ட
சீட்டிழுப்பு முடிவுகள்.

1 ஆம் பரிசு 0978  2 ஆம் பரிசு 0839
3 ஆம் பரிசு 0596

ஆறுதல் பரிசுகள்

▶ 1559 ▶ 0100 ▶ 0982
▶ 0764 ▶ 0051 ▶ 1429

★ 08-11-2000-க்கு முன் பரிசுக்கு உரிய சீட்டுகளுடன் ஆலயத்தில் வந்து பரிசுகளைப் பெற்றுக் கொள்ளவும்.

**விஸ்வகுல இளைஞர்கள்.**

(80042)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவன விரிவுரையாளரும்
முகாமைத்துறைத் தலைவருமான
திரு. க. கதிரமலை
அவர்களின் அன்புக்குரிய மாமனார்


**சின்னப்பு வேலும்மயிலும்**

அவர்கள் 30—10—2000 அன்று காலமானதையிட்டு கலங்கித் தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இயக்குநர், விரிவுரையாளர்கள்,
அலுவலக உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

(80041)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கதிரவேலு சந்திரராசா**
(பொது முகாமையாளர் வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, மானிப்பாய்; தலைவர், ஊழியர் நலன்புரிச் சங்கம்-வலிகாமம் கொத்தணி)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 05-05-1953 | 31-10-1995 |

ஆண்டு ஐந்தென்ன ஐந்நூறு சென்றாலும்
உன் நினைவு மாறாது
அணையாத தீபமாய் எம் உளமதில் நீ வாழ்கின்றாய்.
கூட்டுறவுத் துறையில் நீ செய்த சேவை நாட்டிலுள்ள
கூட்டுறவாளர் பின்பற்ற வேண்டிய பாடங்கள்.
உன் மறைவு உன் குடும்பத்தார் உறவினர்க்கு
மட்டுமல்ல
கூட்டுறவாளர் அனைவருக்கும் பேரிழப்பு.
என்றென்றும் உன் நினைவை நினைவு கூரும்

**அமரர் சு. நடேசு, அமரர் க. சந்திரராசா**
ஆகியோரின்

ஞாபக தூபி திறப்பு விழா
இன்று முற்பகல் 10.00 மணியளவில் நடைபெறும்.

**பணிப்பாளர், பணியாளர்கள்,**
வலிகாமம் பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்
கொத்தணி, மானிப்பாய்.

**ஊழியர் நலன்புரிச் சங்கம்,**
வலிகாமம், பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்
கொத்தணி. மானிப்பாய்.
(சி. 13631)

# அச்சுவேலி கோழிப் பண்ணை

# கிராமிய வங்கி சமாசத்தின் கீழ்

யாழ்ப்பாணம், ஒக். 31

கால்நடை சுகாதாரத் திணைக்களத்தினால் நடத்தப்பட்டு வரும் அச்சுவேலி கோழிப்பண்ணை யாழ். மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

கடந்த கால வன்செயல்களினால் செயலிழந்திருந்த இந்தக் கோழிப்பண்ணை ஐ. நா. அபிவிருத்தித் திட்ட உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டது.

கடந்த ஒரு வருடமாக இந்தப் பண்ணையில் கோழிக் குஞ்சு உற்பத்தி மேற்கொள்ளபபட்டு வருகின்றது

இந்தப் பண்ணையைக் கூட்டுறவுக் கிராமிய வங்கி சமாச நிர்வாகத்திடம் ஒப்படைப்பது சம்பந்தமான தீர்மானம் யாழ். அரச செயலகத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் எடுக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் யாழ் அரசாங்க அதிபர் க. சண்முகநாதன், கால்நடை சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் டாக்டர் பி. இராமநாதன், மாகாண அமைச்சுச் செயலாளர் க. சண்முகலிங்கம், மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஆ. சுப்பிரமணிய சர்மா, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-5)

## சிறுவர் பூங்கா அடுத்த மாதம் திறப்பு

நெல்லியடி, ஒக். 31

பருத்தித்துறை நகரசபை பொது நூலகத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறுவர் பூங்கா அடுத்த மாதம் திறந்து வைக்கப்படவுள்ளது.

பருத்தித்துறை நகரசபையின் முன்னாள் தலைவரான அமரர் வ. விஜயரத்தினத்தின் ஏற்பாட்டில் நிறுவப்பட்ட இந்த நூலகத்திற்கு பருத்தித்துறை நகரசபை 35 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்களை கொள்வனவு செய்துள்ளது. (ஐ-109)

## திருத்த வேலைகள் ஆரம்பம்

கொழும்புத்துறை, ஒக். 31

கடந்தகால யுத்த அனர்த்தம் காரணமாக தடைப்பட்டிருந்த யாழ்ப்பாணம்பொது நூலகத் திருத்த வேலைகள் தற்போது மீண்டும் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன (ஐ-30)

## விளக்கமறியலில் வைக்க உத்தரவு

கொழும்பு. ஒக். 31

சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்காவின் மெய்ப்பாதுகாவலர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கடந்த 27 ஆம் திகதி கம்பஹா மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

எதிர்வரும் நவம்பர் 8 ஆம் திகதிவரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு மாவட்ட நீதிவான் ரங்கண பெரேரா றாகம பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

கடந்த 26 ஆம் திகதி சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்காவின் மெய்ப்பாதுகாவலரான இன்ஸ்பெக்டர் அஜித் ஜெயசிங்க இனந்தெரியாத நபர்கள் இருவரால் அவரது வீட்டில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டமை தெரிந்ததே (ஐ-8-4)

## ஆலயம் புனரமைப்பு

கொழும்புத்துறை, ஒக். 31

ஊரெழு அருள்மிகு ஸ்ரீவீரகத்தி விநாயகர் கோயிலை புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகளை தேவஸ்தான பரிபாலன சபையினர் மேற்கொண்டுள்ளனர்.

சுமார் பத்து லட்சம் ரூபா செலவில் 3 தள இராஜ கோபுரம், 2 லட்சம் ரூபா செலவில் வசந்த மண்டபம், ஐந்து லட்சம் ரூபா செலவில் ஸ்தம்ப மண்டபம், 4 லட்சம் ரூபா செலவில் [illegible] மணிமண்டபம் என்பன புதிதாக அமைக்கப்படும். (ஐ-30)

# அரசமைப்புச் சீர்திருத்தம் குறித்து இரு பிரதான கட்சிகளும் கவனம்

## கலந்துரையாடல் நடப்பதாகத் தகவல்

கொழும்பு, ஒக். 31

நாடாளுமன்றில் முன் வைக்கப்பட்ட அரசமைப்புச் சீர்திருத்தம் குறித்து மீண்டும் ஆராய்வதற்கு இரு பிரதான கட்சிகளும் கவனம் செலுத்தி வருவதாகக் கொழும்பு சிங்களப் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியாகி உள்ளது.

இந்த விடயம் குறித்து மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக ஐ. தே. கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டிரோன் பெர்னாண்டோ மற்றும் நீதி அமைச்சர் பட்டி வீரக்கோன் ஆகியோர் கலந்துரையாடி உள்ளனர் எனவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

அரசமைப்புச் சீர்திருத்தத்துக்கு ஐ. தே. கட்சி எதிர்ப்புத் தெரிவிக்கும் விடயங்கள் குறித்து இரு கட்சிகளும் பேசி ஓர் இணக்கப்பாடு காணப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பாக இந்தக் கலந்துரையாடலின்போது பட்டி வீரக்கோன் தெளிவு படுத்தினார்.

இனப் பிரச்சினைக்கு இந்தப் புதிய அரசமைப்புச் சீர்திருத்தமே ஒரே தீர்வு என்றும்—

அதைப் பதினொராவது நாடாளுமன்றில் நிறைவேற்றுவதே அரசின் ஒரே எதிர்பார்ப்பு எனவும் — அமைச்சர் பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார். (ஐ-8-20)

# ஒடியல் மா தயாரிப்பதற்கு இரு தொழில் நிலையங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 31

ஒடியல் மா, புளுக்கொடியல்மாபோன்றவற்றைத் தயாரிப்பதற்கு வடமராட்சி மற்றும் மானிப்பாய்ப் பகுதிகளில் இரண்டு தொழில் நிலையங்கள் நிறுவப்படவுள்ளன.

பனை அபிவிருத்திச் சபையினால் ஒருமாத காலத்தில் இந்த தொழில் நிலையங்கள் ஆரம்பிக்கப்படும் என்று அதன் தலைவர் மு. பாக்கிநாதன் தெரிவித்தார்.

இந்த நிலையங்களில் பொது மக்களின் நன்மை கருதி ஊறவைத்த அரிசி, மிளகாய்த்தூள், கோப்பி போன்றவையும் கட்டுப்பாட்டு விலையில் அரைத்துக் கொடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்தத் தொழில் நிலையங்களில் நவீன இயந்திரங்கள் பொருத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-5)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1917 | 1990 |
| 05 | 10 |
| 03 | 22 |



**பிரம்மஸ்ரீ கி. நாராயணசர்மா**

வேதமும் ஆகமமும் வியாகரணம்
விழுமிய ஆகமக்கிரியை யாவும்
போதமிகு மஹோதங்கள் பத்தநிகள்
பூஜாவி தானங்கள் ஸம்ஸ்கா ரங்கள்
சாதகஞ்சேர் பூர்வபரக் கிரியை யோடு
சமஸ்கிருத மொழிவளர்த்த வேத நூலோன்
நாதமிகு நாராயண சாஸ்த்தி ரிகள்
நல்லாத்மா சிவபதத்தில் பெறுக ஸாந்தி!

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(80055)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மறைபொருள் என்ன?

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அண்மையில் நோர்வேக்குச் சென்று வந்தார். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு நோர்வே தொடர்ந்து அனுசரணையாளராகச் செயற்படுவதை அரசாங்கம் விரும்புகிறது என்ற செய்தியை அந்நாட்டு அரசிடம் சொலவது அவரது விஜயத்தின் நோக்கங்களில் ஒன்றாக இருந்தது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் புதிய அரசின் நிலைப்பாடு முன்னரை விட மாறவில்லை; மாற்றபடவில்லை; என்பதனைக் கூறுவதே அவரது பிரதான பணியாக இருந்தது.

கதிர்காமர் தமது விஜயத்தின் போது ஊடகத் துறைகளுக்கு வழங்கிய செவ்விகளில் ஒன்றில், விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்குத் தயாரில்லை என்பதே இன்றைய பிரதான பிரச்சினை என்று கூறியிருக்கிறார். சமாதான நடவடிக்கைகளில், முயற்சிகளில் முன்னேற்றம் காணப்படாமல் இருப்பதற்குப் புலிகளே காரணம் என்றும் அவர் குற்றஞ்சாட்டி உள்ளார்.

ஆனால் பேச்சுவார்த்தைக்குத் தயாரில்லை என்று விடுதலைப புலிகள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. நோர்வே அரசிடம் அவ்வாறு கூறியதாகவும் ஊர்ஜிதமான தகவல்கள் எதுவும் இல்லை.

போரை நிறுத்தி, பேச்சுவார்த்தைகளை நேர்மையுடன் முன்னெடுக்கத் தனக்குள்ள தடங்கல்களை மறைப்பதற்காகவே அரசு இத்தகைய குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறது. சமாதானத் தேடலில் அக்கறை இருப்பின், போரைத் தொடரவேண்டும்; விடுதலைப் புலிகளை அழிக்கவேண்டும் என்று தனக்கு வாய்ப்பான புறநிலைகளை அரசாங்கம் தொடரமாட்டாது.

போயினால் நாட்டுக்கு நஷ்டம் எதுவுமில்லை; அரசாங்கம் எதனையும் இழக்கப் போவதில்லை என்ற உணர்வுடன் அரசு செயற்படும்போது, அடுத்த தரப்பு மீது குற்றஞ் சுமத்த வேண்டிய தேவை அதற்கு உண்டாகிறது.

பலாத்கார வழியில் தனிநாடு ஒன்றைத் தோற்றுவிப்பதற்காக விடுதலைப் புலிகள் போராடுகின்றார்கள். இறைமையுள்ள எந்த அரசாங்கமும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது; சுய பாதுகாப்புக்காக அரசாங்கம் போரை நடத்துவதற்குக் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது — இன்னொரு செவ்வியில் வெளியுறவு அமைச்சர் தெரிவித்திருப்பது இது.

தனிநாட்டுக்குப் பதிலாக தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்ற வல்ல மாற்றுத் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை; முன்வைக்கவில்லை.

சமஷ்டி ஆட்சி முறையின் கீழ் தன்னாட்சி உரிமையையேனும் தமிழர்களுக்கு வழங்குவதற்கு கொழும்பு அரசுகளுக்கு விருப்பமிலலை, இயலவிலலை, வல்லமையில்லை என்பதே பொருத்தம்.

செல்வா காலத்தில் சாத்விக வழியில், ஜனநாயக வழியில் தமிழர்கள் சமஷ்டி கேட்டனர்.

பின்னர் தனிநாடு கேட்டனர்; 1997 ஆம் ஆண்டில் வடக்கு—கிழக்கு வாழ் மககள் தங்கள் வாக்குகள் மூலம் அந்தக் கோரிக்கையை உறுதிப்படுத்தினர். இம் முயற்சிகள் தோல்விகண்டதனாலேயே ஆயுதப் போராட்டம் தொடங்கியது. இது வெளியுறவு அமைச்சருக்குத் தெரியாதா?

தமிழர்களுக்கு ஜனநாயக வழியில் தனிநாடு வழங்க அரசு தயாராக இருக்கிறதுஎன்றமறைபொருளுடன் அமைச்சா கூறுவது அவரது சொந்தக் கற்பனையே! அதில் ஒருசத வீதமும் யதார்த்தம் இல்லை!!

# பிரதி அமைச்சர்களது நியமனம்

# தொடர்ந்தும் இழுபறி நிலையில்!

கொழும்பு, ஒக் 31

பிரதி அமைச்சர்களை நியமிக்கும் விவகாரம் தொடர்ந்தும் இழுபறி நிலையிலேயே உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதி அமைச்சர் நியமனம் தொடர்பான பட்டியலைத் தயாரிப்பதில் பெரும் சிக்கலை அரசு எதிர்நோக்கியுள்ளது.

அரசில் பங்காளிக்கட்சியாக இணைந்துள்ள தேசிய ஐக்கிய முன்னணி தனக்கு ஐந்து பிரதி அமைச்சர் பதவிகள் வழங்க வேண்டும் என்று அடம் பிடித்துக் கொண்டிருப்பதாலும் —

அரசில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளின் கோரிக்கைகளாலும் —

பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்குப் பிரதி அமைச்சர் பதவி வழங்குமாறு அழுத்தம கொடுப்பதாலும்—

பட்டியலைத் தயாரிக்க முடியாத நிலை ஜனாதிபதிக்கு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இநதப்பட்டியலைப் பூர்த்தி செய்வதற்காக ஜனாதிபதி நேற்று முன்தினம் ஏனைய தலைவர்களுடன் கலந்துரையாடியதாகவும் எனினும் முடிவுகள் எதுவும் எடடப்படவில்லை என்றும் கூறப்பட்டது. (ஐ-3)

## புதிய கல்வி மறுசீரமைப்பின் கீழ் இலவசப் பாடநூல்கள் தயாரிப்பு

வலிகாமம் தெற்கு. ஒக். 31

புதிய கல்வி மறுசீரமைப்பின் கீழ் 3. 8. 11 ஆம் தரங்களுக்கு அடுத்த வருடம் சகல புததகங்களும் புதிதாக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட உள்ளன.

அடுத்த வருடத்துக்குரிய இலவச பாடநூல்களை இவ் வருடம் முடிவடைவதற்குள் மாணவர்களுக்கு வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புதிய கல்வித் திட்டத்துக்கமைய 1999 ஆம், 2000 ஆம் ஆண்டுக்கான புத்தகங்களை அச்சிட்டு வெளியிடுவதற்கு அரசு பெருமளவு பணத்தை செலவிட்டிருப்பதாகவும் —

அவைகளைத் தொடர்ச்சியாக மூன்று வருடங்களுக்காகவாவது பாடசாலைகள் பயன் படுத்த வேண்டும் எனவும்— பதில் கல்வி வெளியீட்டு ஆணையாளர் ஆனந்த சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதனைக் கருத்தில் கொண்டு 2001 ஆம் ஆண்டு பாடசாலைகளுக்கு 6, 9 ஆம் தர ஆங்கிலம், 9 ஆம் தர தமிழ். 7 ஆம் தர ஆங்கிலம், விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் கணிதம், தமிழ், சமூகக் கல்வியும் வரலாறும் ஆகிய பாடநூல்கள் மீண்டும் விநியோகிக்கப்பட மாட்டாது எனவும்—

இலவசமாகக் கிடைக்கும் பாடநூல்களை மிக அக்கறையுடன் புனிதமாகவும். கவனமாகவும் பாவித்து திருப்பி ஒப்படைக்க வேண்டும் என்ற மன உணர்வை மாணவர்களிடம் ஏற்படுத்த வேண்டும் எனவும் ஆனந்தசிறிசேன வலியுறுத்தியுள்ளார்.

(ஐ-152)

## கோட்டைமுனையில் தேடுதல்

மட்டக்களப்பில் கோட்டைமுனைப்பகுதி நேற்று முன்தினம் அதிகாலை 5-30 மணிக்குச் சுற்றி வளைக்கப்பட்டுத் தேடுதல் இடம் பெற்றது முற்பகல் 9 மணி வரை இந்தத் தேடுதல் நீடித்தது (ஐ-3)

## அன்பளிப்பு

வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு லயன்ஸ் கழகத்தினரால் மானிப்பாயில உள்ள விழிப்புலன் இழந்தோர் வாழ்வகத்தில் உள்ள பிள்ளைகளுக்குத்தேவையான வெள்ளைப் பிரம்புகளும், 8 ஆயிரம் ரூபா பெறுமதியான பல அன்பளிப்புப் பொருள்களும் வழங்கப்பட்டன.

லயன்ஸ் கழகத்தின் மானிப்பாய் வட்டம், இணுவில், கொக்குவில், உரும்பிராய், சாவகச்சேரி, நல்லூர், சுன்னாகம் ஆகிய லயன்ஸ் கழகங்கள் ஒன்றிணைந்து அன்றைய தினம் வாழ்வகத்திலுள்ள கண்பார்வை குறைந்த பிள்ளைகளுக்கு தேநீர் விருந்தும் அளிததனர்.

இந்நிகழ்வில் லயன்ஸ் கழக மாவட்டத் தலைவர் லயன் கே. தவபாலன் கலந்து கொண்டார்.

லயன்ஸ் கழக மாவட்டத் தலைவரும் சேவை இணைப்பாளருமான லயன் எஸ் எஸ். தங்கராசாவினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நிகழ்வின் இறுதியில் அவரின் தலைமையில் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது

வாழ்வகத்தின் பொறுப்பாளர் செல்வி சின்னத்தம்பி நன்றியுரை வழங்கினார்.

## விநாயகமூர்த்தி எம். பி. கைதிகளைப் பார்வையிட்டார்

பண்டாரவளை புனர் வாழ்வு முகாமில் நடத்தப்பட்ட தாக்குதலில் காயமடைந்த தமிழ் இளைஞர்களை யாழ் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான அ. விநாயகமூர்த்தி நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டார்.

தியத்தலாவை இராணுவ ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் பத்துத் தமிழ் இளைஞர்களையும் பார்வையிட்ட அவர் அவர்களில் பலர் கோடரி, வாள் வெட்டுகளினாலும் ஒரு சிலர் துப்பாக்கிச்சூட்டினாலும் காயமடைந்துள்ளனர் என்று தெரிவித்தார்.

இதேவேளை —

பண்டாரவளை புனர் வாழ்வு முகாமிற்கும் அவர் சென்று சம்பவம் நடைபெற்ற இடத்தினைப் பார்வையிட்டார்.

சுற்றிவர முட்கம்பிகளினால் வேலிகள் போடப்பட்டு பாதுகாப்பாக இருக்கும் இந்த முகாமில் பிரதான வாசல் ஊடாகவே உள்ளே புகுந்து தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது என்றும் —

பிரதான வீதியிலிருந்து 300 யார் தூரத்திலுள்ள இந்த முகாமிற்கு அருகில் வீடுகளோ, மனித நடமாட்டமோ இல்லை என்றும் —

சம்பவதினம் பொலீஸாரின் பூரண ஒத்துழைப்புடன் உள்ளே நுழைந்தே இந்தப் படுகொலை நிகழ்த்தப்பட்டிருக்கிறது என்றும் —

அவர் தெரிவித்தார்.

(ஐ-5)

## ஆஸ்பத்திரிக்கு வந்த சிறுமியை ஏமாற்றி நகைகள் பறிப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ். போதனா வைத்தியசாலையில் வெளிநோயாளர் பகுதிக்கு சிகிச்சைக்கு வந்த நாரந்தனையை சேர்ந்த 4 வயது சிறுமியிடமிருந்து சுமார் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலி, காப்பு என்பன திருடன் ஒருவனால் சாதுரியமாக அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன.

நேற்றுக்காலை இடம்பெற்ற இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:

ஆஸ்பத்திரிக்கு இரண்டு பெண் பேரப்பிள்ளைகளுடன் வந்த வயோதிபப் பெண் ஒருவர் இரு சிறுமிகளையும் பற்சிகிச்சைப் பிரிவு வெளிப்பகுதி வாங்கு ஒன்றில் இருக்க வைத்துவிட்டு பற்சிகிச்சைக்காக, சிகிச்சைப் பிரிவினுக்குச் சென்றார். அவர் திரும்பிவர நீண்ட நேரம் எடுத்தது. இதனை அவதானித்த நபர் ஒருவர் சிறுமிகளுடன் வாங்கில் அமர்ந்து கதைக்கத் தொடங்கினார் சிறுமிகளில் ஒருத்தி தண்ணீர் வேண்டும் எனக் கேட்க அவரை அழைத்துச் சென்ற அந் நபர் ஐஸ்கிறீம் கடை ஒன்றுக்குள் கூட்டிச் சென்று ஐஸ்கிறீம் வாங்கிக் கொடுத்து பின் அவரிடமிருந்த 3 பவுண் பெறுமதியான சங்கிலி, காப்பு ஒரு சோடி என்பனவற்றைக் கழற்றிய அந் நபர் அவற்றைப் பத்திரமாக வைத்திருப்பதாகக் கூறியபடி அச் சிறுமியைத் திரும்பவும் அழைத்துவந்து வெளிநோயாளர் பிரிவு முன் பகுதியில் விட்டுவிட்டுத் தலைமறைவாகியுள்ளார்.

பிள்ளைகளைத் தேடிய பேர்த்தியார் நடந்த சம்பவத்தை பின்னர் சிறுமிகள் மூலம் அறிந்து கொண்டார்.

இச் சம்பவம் தொடர்பாக பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ- 15-5)

### உதயவாக்கு

மகிழ்ச்சியுள்ள வாழ்க்கை நல்லொழுக்கத்திலேயே பொதிந்துள்ளது.

-- லத்தீன்

## நாளை

ஐப்பசி 16

புதன்கிழமை

திதி: பஞ்சமி

மாலை 6 31 வரை.

நட்சத்திரம்: மூலம்

பிற்பகல்: 2. 39 வரை.

ஸ்கந்த பஞ்சமி நாள்

ஜபம்நேரம்: 4 34 — 6.04

ராகுகாலம்: 12 04 — 1.34

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## தலைமைத்துவப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஒக். 31

எதிர்வரும் 3 ஆம், 4 ஆம் திகதிகளில் யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறுவதாக இருந்த இன்ரறக்ட் கழகத்தினருக்கான தலைமைத்துவப் பயிற்சி எதிர்வரும் 4 ஆம், 5 ஆம் திகதிகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-8)

## 'போரூட்' நிறுவனம் உதவி

அல்வாய் வடக்கு இந்து தமிழ்க்கலவன் பாடசாலையிலுள்ள இடம்பெயர்ந்தோர் முகாமில் பருத்தித்துறை 'போரூட்' நிறுவனத்தினர் மலசலகூடம் ஒன்றினை அமைத்துக் கொடுத்துள்ளனர்.

இந்நிறுவனத்தினால் ... ஒன்றும் புனரமைக்கப்பட்டுள்ளது.

(ஐ-30)

## கந்த சஷ்டியில் வந்தெம்மைக் காத்தருள்வாய் வேலவா!

குண்டு போட்டு சண்டை மூள
குற்றுயிராய் மாள்கிறோம்
பண்டு தொட்டு வாழ்ந்த மண்ணும்
பாலைவனமாய்ப் போச்சுது
தொண்டு தொட்டு எம்மைக் காத்த
தொன்மையான தெய்வமே!
கண்டு வினைகள் போக்கிடைய்யா
கந்த சஷ்டி காக்கின்றோம்.

ஆறுமுகம் கொண்டிலங்கும்
அண்ணல் தந்த செல்வமே!
வேறு பக்கம் நீ திரும்பி
வேலைத் தாங்கி நிற்பதேன்?
கூறும் அடியார் வினைகள்
கூறு போட்ட கொற்றவா
ஆறுதலை அளிப்பதற்கு
ஆறு முகமும் போதாதோ!

உண்டியின்றி உறக்கமின்றி
உன்னை வேண்டித் தொழுகின்றோம்
கண்ணில் நீர் கசிந்து ஓட
கரங்கள் கூப்பி வேண்டுகிறோம்.
மண்ணை ஆளும் முருக வேளே!
மனமிரங்க மறுப்பதேன்?
பின்னை உன்னை வணங்குவதால்
பெறும் நன்மை வேறுண்டோ?

சூரன் தன்னை சுட்டெரித்த
சுந்தர வேலெங்கே?
வீர தீரச் செயல்கள் செய்த
வெற்றி வேலும் போனதோ?
தீராத வினைகள் தீர்த்த
திருமுகத்தைக் காட்டாயோ?
ஆராத காதல் கொண்ட
அடியவரும் மாழ்வதோ?

மு. திருநாவுக்கரசு
(முன்னாள் நீதிபதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

கற்பகப்பிள்ளையார் கோயிலடி, உடுவில், சுன்னாகம என்னும் முகவரியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் பாமினி என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.776852830v), விசேட அடையாள அட்டை இரண்டும் 26-10-2000 அன்று துரைவீதிக்கும், கற்பகப்பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்குறிப்பிட்ட முகவரியில் அல்லது கிராம சேவகர் பிரிவு **J/183** இல ஒப்படைத்துதவவும். (80039)

யேசுதாசன ருஷாந்தன் என்பவருடையவிசேட அ.அ.(இல.0901007846) ஆனைக்கோட்டை அடைக்கல மாதா கோயிலுக்கு அண்மையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உயரப்புலம் வாசிகசாலையில் ஒப்படைத்துதவவும் (80033)

செல்லையா இராசம்மா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.305381900v) 25-10-2000 அன்று யாழ். நவீன சந்தையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் 387, நாவலர் வீதி, நல்லூர் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (80035)

அச்சுவேலி தெற்கு, பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த செல்வி ஜெகனி மகாலிங்கம் என்பவரது விசேட அடையாள அட்டை (இல. 0903009356) 20-10-2000 அன்று யாழ். பஸ்நிலையத்தில் தவறிவிட்டது.கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்காணும் முகவரியில் அல்லது சோதி ரெக்ஸ், நவீன சந்தை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (80010)

### இலக்கியக்கட்டுரைகள்

**A/L** மாணவர்களுக்கு வேண்டிய சிறுகதை மதிப்பீடு, இலக்கிய விமர்சனம் இரண்டையும் தரும நூல் 325 நாடகங்களும் 50 சிறு கதைகளும் எழுதிய அராலியூர் ந.சுந்தரம் பிள்ளை தரும் 38 கட்டுரைகள். (79976)

### விற்பனைக்கு

இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய தலை நகை சோடனைச் செற் (முதல் தரமானவை) விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம். தொடர்புகளுக்கு: 154, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம். (80030)

### பாடசாலை ஓடுகள் திருட்டு

மத்தியூஸ் வீதியில் அமைந்துள்ள புனித சாள்ஸ் ம.வியின் ஆரம்பப் பிரிவு பாடசாலையில் உள்ள ஓடுகள் அடிக்கடி திருடப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இப்பகுதியில் உள்ள மக்களில் பெரும்பாலானோர் இடம் பெயர்ந்துள்ளதால் திருடர்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி திருட்டில் ஈடுபட்டுவருகின்றனர். (ஐ-51)

### காயமடைந்தவர் மரணம்

யாழ்ப்பாணம்,ஒக்.31

கேகாலை-கண்டி வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கோர விபத்தில் காயமடைந்தவர்களில் ஒருவர் நேற்றுக் கொழும்பு ஆஸ்பத்திரியில் மரணமானார்.

புலோலி கிராமக் கோட்டடியைச் சேர்ந்த கனகசபை உதயகுமார் (வயது 32) என்பவரே உயிரிழந்தவராவார். இந்த விபத்துத் தொடர்பாக நேற்றுமுன்தினம் உதயனில் வெளியான செய்தியில் இவரது பெயர் கனகசபை ஜெயக்குமார் எனக்குறிப்பிடப்பட்டிருந்தது தவறாகும்.

இவருடன் சேர்த்து இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நான்காக உயர்ந்துள்ளது. (ஐ-3-109)

### கைதுசெய்ய நடவடிக்கை

கொழும்பு,ஒக்.31

நாடாளுமன்ற தேர்தலின் பின்னர் நடைபெற்ற வன்செயல்கள் தொடர்பாக இதுவரை கைது செய்யப்படாத சந்தேக நபர்களை உடனடியாக கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விசேட பொலீஸ் குழுக்களை ஈடுபடுத்தி சந்தேக நபர்களை விரைவில் கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பதில் பொலீஸ்மா அதிபர் ரி. ஆனந்தராஜா உத்தரவிட்டுள்ளார்.

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தலைமையில் இடம்பெற்ற ஆலோசனைக் கூட்டத்தினைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ-ரி)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 - 08 - 1925 | 01 - 10 - 2000 |

அமரர் **முத்துக்குமாரு சபாரத்தினம்**

(முன்னாள் பிரதம லிகிதர் - R.V.D.B,
நிர்வாக சபைத் தலைவர் - கற்குளி கந்தசாமி கோயில்)

அன்போடு எம்மை அரவணைத்து பாசத்துடன்
காத்து வளர்த்த அன்புத் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**- குடும்பத்தினர்.**

தகவல்:
S.A.விக்னகுமார்,
*சங்கரத்தைச் சந்தி,*
*வட்டுக்கோட்டை.*

நிரந்தர முகவரி:-
*நுணாவில் மத்தி,*
*சாவகச்சேரி.*

(80047)

## காணவில்லை

28-10-2000 ஆம் திகதி சனிக்கிழமை எனது தந்தையாரின் இறுதிகிரியைகளின் போது தாவடி இந்து மயானத்தில் நிறுத்தப்பட்டிருந்த நீல நிற YAMAHA NEWS MATE இல. 500 - 1989 அடிச்சட்ட இலக்கமும், இயந்திர இலக்கம் V50-7396066 உம் உடைய மோட்டார் சைக்கிளை காணவில்லை. இது பற்றிய மேலதிக தகவலை அறிந்தவர்கள் அல்லது மோட்டார் சைக்கிளை கண்டவர்கள் கீழ் உள்ள விலாசத்திற்கு அறியத்தருமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறேன். உரிய சன்மானம் வழங்கப்படும்.

**Dr. க. சிவராசா**
**காங்கேசன்துறை வீதி,**
**கோண்டாவில் மேற்கு, கோண்டாவில.**

(80040)

## அழைப்புக் கட்டளை

**இல.16 பிரிவு 55 (1)**

**மல்லாகம் என்னுமிடத்திலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில்**

**வழக்கு இல: மணநீக்கம்/106**

இன்பராஜ், பெண் தேவகி,
(செல்லத்துரை மகள் தேவகி)
*காட்டுப்புலம்,*
*அளவெட்டி மேற்கு,*
*அளவெட்டி.*

- வழக்காளி

*எதிர்*

செல்லையா இன்பராஜ்
*கலைநகர்,*
*அளவெட்டி தெற்கு,*
*அளவெட்டி.*

- எதிராளி

*மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளிக்கு,*

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி 1993 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 10ஆம் திகதி தனக்கும் எதிராளியாகிய உமக்கும் நிறைவேறிய பதிவுத் திருமணத்தை இரத்துச் செய்து மணநீக்கம் வழங்குமாறு கோரி இந்த நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளார். ஆதலினால் இக்கோரிக்கைக் கெதிராக உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதம 07ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இந்த நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட திகதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத் தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரர் இல்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்.

பதிவு பெற்ற தரணிமூலம் தோன்றாவிடின், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரி ஒன்றைக்கூறும் விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
**செ. விக்னேஸ்வரமூர்த்தி**
*பதிவாளர்*

*குறிப்பு:* விளக்கத் திகதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் திகதி பற்றிய அறிவித்தலை நீவீர் பெறவிரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரி ஒன்றை இந்த நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும் 80ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகிறீர்.

**செ. விக்னேஸ்வரமூர்த்தி**
*கையொப்பம் பதிவாளர்*

2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதியாகிய இன்று

வரைவு: பொ.சுந்தரலிங்கம்
*வழக்காளியின் சட்டத்தரணி*

***மாவட்ட நீதிமன்றம்***
***மல்லாகம்.***

(C/13629)

## கண்ணீர் அஞ்சலி

**யாழ். பல்கலைக்கழக வரலாற்று சிறப்புக் கலை மாணவன்**

**க. ஜெயக்குமார்** ***அவர்களின் தாயார்***

**திருமதி சின்னக்கிளி கந்தையா**

அவர்கள் 2000-09-22 இறைவனடி சேர்ந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம.

**3 ஆம் வருட**
**வரலாற்று சிறப்பு கலை**
**மாணவர்கள்.**

(c/13630)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **பொன்னுச்சாமி சுந்தரலிங்கம்**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05-12-1934 | 12-11-1999 |

திதி: *31-10-2000*

அன்பின் இருப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் தலைவனாய் எம் உயர்வுக்காக
நல்வாழ்வு காட்டிய எம் அன்பு ஐயாவே!
நீங்கள் ஓடி மறைந்தீர் மாதம் பன்னிரண்டு
எங்கள் மனதில் என்றும் வீற்றிருப்பீர் பல்லாண்டு!

உங்கள் பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

*74/1 காரைக்காட்டு ஒழுங்கை,*
*வண்ணார்பண்ணை.*

(79960)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

**கணபதி குழந்தையன்**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11-04-1927 | 01-10-2000 |

எங்கள் குடும்பத் தலைவர் அமரர் கணபதி குழந்தையன் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும தபால மூலமும், தொலைபேசி மூலமும் எமது துயரில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், யா/அச்சுவேலி மகா வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள் மற்றும் பல வழிகளிலும் உதவியளித்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (31-10-2000) செவ்வாய்க்கிழமைஅன்னாரின இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து அவரது ஆத்மா சாந்தியடை யப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

**- குடும்பத்தினர்.**

*பாடசாலை வீதி,*
*இமையாணன் கிழக்கு,*
*உடுப்பிட்டி.*

(80022)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பண்டாரவளைப் படுகொலைச் சம்பவம்

# உண்மை நிலையை விளக்க ஜே.வி.பி. பிரசாரம் செய்யும்

கொழும்பு,ஒக்.31

பண்டாரவளை விந்துனுவெவ தடுப்பு முகாமில் தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான உண்மை நிலையைப் பொதுமக்களுக்கு விளக்குவதற்கான பிரசாரங்களை ஜே.வி.பி. அடுத்தவாரம் ஆரம்பிக்கவிருக்கின்றது.



யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியில் இடம்பெற்ற வாணிவிழாவின் போது மாணவிகள் பங்குபற்றும் நடன நிகழ்வில் எடுக்கப்பட்ட படம். (இ-8)

அந்த அமைப்பின் பிரசாரச்செயலாளர் விமல் வீரவன்ஸ நேற்றுக் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலை வெளியிட்டார்.

அந்த செய்தியாளர் மாநாட்டில் அவர் தெரிவித்ததாவது:-

சிங்கள இனவாதக் கட்சிகளின் பிரபல்யமானவர்களின் வழி நடத்தலின் கீழ் இரண்டுவான்களில் வந்தவர்களால் சில பாதுகாப்பு அதிகாரிகளின் உதவியுடன் இந்த முகாமில் இருந்த இளைஞர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்தச் செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

சம்பிரதாயத்திற்காகக் கமிஷன் அமைக்கும் முடிவைக் கைவிட்டு, உடனடியாக நாடாளுமன்றத்தைக் கூட்டி சகல கட்சிகளுடனும் ஆலோசனை நடத்தி இக்கொடூரமான கொலையைச் செய்தவர்களுக்குத் தண்டனை வழங்க வேண்டும்.

இந்தச் சம்பவத்தைப் பயன்படுத்தி சிங்கள இனவாத இயக்கங்களும், ஐ.தே.கட்சி சார்பான சந்திரசேகரம் போன்றவர்களும், அரசாங்க சார்பான ஈ.பி.டி.பி அமைப்பினரும் நாட்டில் இனக்குரோதத்தை ஏற்படுத்தி குறுகிய அரசியல் இலாபம் தேட முனைகின்றனர்.

இதன் காரணமாக மீண்டும் 1983 நிலைமையை ஏற்படுத்த நினைப்பது வெறுக்கத்தக்கது. அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்துவதை விட்டு துவேஷத்தைக் காட்ட முனைவது ஆரோக்கியமானதல்ல.

இந்தக் கொலையைச் செய்தவர்கள் விடுதலைப் புலிகள்அமைப்புக்கே உதவி செய்துள்ளனர். அவர்கள் சர்வதேச ரீதியில் பிரசாரங்களை மேற்கொள்ள தளம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது - என்றார்.

இந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர்களான அநுரதிசநாயக்க, அஞ்சன உம்மா மற்றும் அமைப்பின் பிரமுகர்களான இராமலிங்கம் சந்திரசேகரன், விமல்ரத்னாயக்க ஆகியோரும் பங்குபற்றினர். (இ-3-8)

## நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

★ காசோலை மூலமாக அனுப்ப விரும்புவோர் மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளையில் இதற்கெனத் தொடங்கப்பட்டுள்ள **C/A 2358** ஆம் இலக்கக் கணக்குக்கு அனுப்பவும். வெளிமாவட்டங்களில் இருந்து நன்கொடை அனுப்புவோர் மேற்படி கணக்கு இலக்கத்துக்குத் தொலைநகல் மாற்றம் (Fax Transfer) மூலம் அனுப்பவும்.

★ மேற்படி நிதிக்குப் பணம் சேகரிப்பதற்கு வெளியார் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதனை அறியத்தருகின்றோம்.

★ நன்கொடை வழங்குவோரின் பெயர், விவரம்-உதயனில் பிரசுரிக்கப்படும். பெயர் குறிப்பிட விரும்பாத அன்பர்களுக்கு உரிய முறையில் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு தொகை விவரம் பெயரின்றியே வெளியிடப்படும்.

| நேற்றுவரை கிடைத்த நிதி:- | ரூபா |
|---|---|
| முன்கொண்டுவரப்பட்டது | 168,207 |
| 1. பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கம(வங்கியூடாக) | 4000 |
| 2. வர்த்தகர் - சங்கானை | 500 |
| 3. ஒரு நலன்விரும்பி - புலோலி மத்தி, பருத்தித்துறை | 200 |
| 4. எஸ். கனகரத்தினம் - முன்னாள் நகரசபைத் தலைவர், சாவகச்சேரி - மீசாலை கிழக்கு | 1000 |
| 5. கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம், பருத்தித்துறை | 500 |
| 6. ஜே. சுகந்தி - 3, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளி | 500 |
| 7. ஓர் அன்பர் - பழம்வீதி, யாழ்ப்பாணம் | 500 |
| 8. இராஜேஸ்வரி இராமலிங்கம் - நாவலர்வீதி, யாழ்ப்பாணம். | 1000 |
| 9. சாவகச்சேரியால் இடம்பெயர்ந்த ஒரு சட்டத்தரணி | 500 |
| 10. சு. சபாநாயகம் - ஏழாலைதெற்கு | 200 |
| 11. திருமதி வி. நவரட்னம் - அன்னை இல்லம், கோண்டாவில் கிழக்கு | 1000 |
| 12. த. குமாரசாமி - குமாரசாமி ரெக்ஸ், நாவலர்வீதி, யாழ்ப்பாணம் | 1000 |
| 13. நல்லூர்த் தொகுதி ஓய்வூதியர் நலன்புரிச் சங்க அங்கத்தினர்கள் | 500 |
| 14. ஓர் அன்பர் - சுன்னாகம் | 500 |
| 15. கருணையுள்ள நால்வர் - நெல்லியடி | 500 |
| 16. அஞ்சல் அலுவலக ஊழியர் - கைதடி | 530 |
| 17. ஓர் அன்பர் - கைதடி | 200 |
| 18. இலங்கை செஞ்சிலுவைச்சங்கம்-தென்மராட்சிப்பிரிவு | 500 |
| 19. செல்வி அலற்றா சவரிமுத்து(P.H.M) மாரீசன் கூடல், இளவாலை | 250 |
| 20. தென்மராட்சி ஓய்வூதியர் நலன்புரிச்சங்க அங்கத்தினர்கள் | 1000 |
| 21. ஓர் அன்பர் - கோவில்வீதி, யாழ்ப்பாணம் | 2500 |
| 22. ஓர் அன்பர் - பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு | 500 |
| 23. எம். சுபாஸ்கரன் - புன்னாலைக்கட்டுவன் தெற்கு | 100 |
| 24. ஏ. எம். கனகசிங்கம் - 5 ஆம் வட்டாரம், வெள்ளை கடற்கரை வீதி, மண்கும்பான் | 501 |
| 25. இந்து வாலிபர் சங்கம் - ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயிலடி, அல்வாய் | 500 |
| 26. அறிவருள் ச. ச. நிலையம் - பெரியார் பகுதி, அல்வாய் | 500 |
| 27. ஓர் அன்பர் - புலோலி தெற்கு | 500 |
| 28. ரி. பஞ்சாட்சரவேலன் - நீர்வேலி வடக்கு | 500 |
| 29. மீன்பிடியியல் டிப்ளோமா மாணவர் மன்றம் - 2 ஆம் அணி, யாழ். பல்கலைக் கழகம் | 501 |
| 30. ஓர் அன்பர் - கைதடி வடக்கு | 500 |
| 31. ஓர் அன்பர் - கோப்பாய் மத்தி | 500 |
| 32. எஸ். மேகலை - சுதுமலை, மானிப்பாய் | 111 |
| 33. கு. வி. கந்தசாமி - பனிப்புலம், பண்டத்தரிப்பு | 530 |
| 34. விற்பனை முகவர் இராசவீதி, கோப்பாய் தெற்கு | 250 |
| 35. இ. ஜெயக்குமார் (ஆசிரியர்) | 200 |
| 36. ஓர் அன்பர் - புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கு | 1000 |
| 37. R. சதாசிவம் - செட்டித்தெரு, நல்லூர் | 500 |
| 38. அதிபர், ஆசிரியர்கள் - நடேஸ்வராக் கல்லூரி, காங்கேசன்துறை | 1000 |
| 39. கு. கனகசபை - வில்லூன்றி, கொட்டடி | 500 |
| 40. ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/உடும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் | 1000 |
| 41. ஓர் அன்பர் - திருநெல்வேலி | 100 |
| | 195,380 |

## செய்முறைப் பரீட்சை ஒத்திவைப்பு

தென்மராட்சி,ஒக்.31

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் ஜி.ச.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் அழகியல், தொழில் நுட்பம் ஆகிய பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சைக்கு இதுவரை தோற்றாத மாணவர்களுக்கு சனிக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடத்தப்படவிருந்த செய்முறைப் பரீட்சைகள் நவம்பர் 11 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார்.

வலிகாமம் பகுதி மாணவர்களுக்கு முன்னர் அறிவித்த படியே நவம்பர் 4 ஆம் திகதி சனிக்கிழமை மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் செய்முறைப் பரீட்சைகள் நடைபெறும் எனவும் அன்றைய தினம் சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர், பாட ஆசிரியர்களையும் தவறாது சமுகம் அளிக்குமாறும் அவர் கேட்டுள்ளார் (இ-ரி)

## தம்பாட்டியில் இலவச வைத்திய முகாம்

யாழ்ப்பாணம்,ஒக்.31

தீவக லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இலவச வைத்திய முகாம் ஒன்று நேற்று முன்தினம் தம்பாட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தீவக லயன்ஸ் கழகத் தலைவர் வைத்திய கலாநிதி லயன். க.இராஜரட்ணம் தலைமையில் நடைபெற்றது.

இதில் நீரிழிவுப் பரிசோதனை 150 பேருக்கும், கண் பரிசோதனை 150 பேருக்கும் மேற்கொள்ளப்பட்டது. 20 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. 400க்கும் மேறபட்டவர்களுக்கு சிகிச்சை [illegible] விரிவுரையாளர் கலாநிதி லயன் குகபாலன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். (இ-ரி)

# சந்திரசேகரன் தடுத்து வைக்கப்பட்டது பக்கச்சார்பான ஒரு நடவடிக்கை

## கரு ஜெயசூரியா கூறுகிறார்

பண்டாரவளை புனர்வாழ்வு முகாமில் தமிழ இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் தலைமையில் ஹர்த்தால் நடைபெற்ற போது, திட்டமிட்டுச்சிலர் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கைகள் காரணமாகவே அங்குபதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் சந்திரசேகரனை விசாரணைக்கு உட்படுத்தியுள்ளமை பக்கச்சார்பான ஒரு நடவடிக்கை ஆகும்.

ஐ.தே.கட்சியின் பிரதித்தலைவர் கரு ஜெயசூரியா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நேற்று விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே அவர் இப்படித் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மலையகத்தில் இடம்பெற்றுள்ள வன்முறைகள் தொடர்பாக சகல தரப்பினரும் விசாரிக்கப்பட வேண்டும்.

பண்டாரவளை முகாமில் தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த உடனடியாகக் கமிசன் நியமிக்கப்பட வேண்டும். அதன் மூலம் குற்றவாளிகளைக் கண்டு பிடித்துத் தண்டனை வழங்க வேண்டும்.

மலையகத்தில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையைத் தணித்து நாட்டில் சகஜ நிலையை ஏற்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ளவேண்டும் - என்றுள்ளது.

### அவசரகாலச் சட்டம் தமிழருக்கே!

நாட்டில் தற்பொழுது பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அவசரகாலச் சட்டம் தமிழர்களுக்கு மட்டும் தான். பெரும்பான்மைச் சமூகத்தவர்களுக்கு அல்ல.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பண்டாரவளை புனர்வாழ்வு முகாமில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட 200 சிங்களவர்களும் எந்தவித விசாரணையும் இன்றி விடுவிக்கப்பட்டமை குறித்து கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறுதெரிவித்தார்.(ஐ-8)

### மூவர் உயிரிழப்பு

'ஓயாத அலைகள்-4' நடவடிக்கையின் போது தமது தரப்பில் உயிரிழந்த மேலும் மூவரின் பெயர் விவரங்களை விடுதலைப்புலிகள் தமது 'புலிகளின் குரல்' வானொலி மூலம் தெரிவித்தனர்.

✪ கரும்புலி மேஜர் வர்மன் அல்லது மேனவன் (வடிவேல் தங்கத்துரை- மட்டக்களப்பு)

✪ கரும்புலி மேஜர் சோபிதன் (துரைசாமி ஜீவகணபதி- வவுனியா)

✪ கரும்புலி கப்டன் சந்திரபாபு (குபரக்கொடி லிங்கராசா- மட்டக்களப்பு)


உ

அருள்மிகு

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி கோயில்



கந்தசஷ்டி விழா

5ஆம் நாள் 2000.11.01 புதன்கிழமை

நண்பகல் 12.00 மணிக்கு:

108 கலச சங்காபிஷேகம்

பி.ப. 12.30 மணி – 3.45 மணிவரை

கந்த நாதஸ்வர கானாமிர்தம்

வழங்குவோர்:

'சங்கீத நாத சாகரம்' R.கேதீஸ்வரன் குழுவினர்

'ரசிக ரஞ்சன கான மாமணி' V.K. கானமூர்த்தி குழுவினர்

பி.ப.4.00 மணிக்கு:

வசந்த மண்டபப் பூசையும் சுவாமி திருவீதியுலாவும்.

அனைவரும் வருக! அருளமுதம் பெறுக!!

6ஆம் நாள் 2000.11.02 வியாழக்கிழமை

பி.ப.4.00 மணியளவில் நாதஸ்வர இசையுடன் நடைபெறும் சூரசம்ஹாரத்தில் கலந்து கொள்ளுமாறும் அழைக்கின்றோம்.

~ ஆலய பரிபாலன சபையினர்.

(80048)



நற்றமிழ் காக்கும் 'விநாசித்தம்பி ஐயா!



எனது நீண்ட நாள் அன்புக்கும் மதிப்புக்குமுரிய ஆசான் அவர்கள்

அருட்கவி சீ.விநாசித்தம்பி ஐயா

அவர்கள் ஆக்கிய கந்தபுராண வசனகாவியம்

என்னும் நூல் 30-10-2000 நேற்று வெளிவந்ததையிட்டு

லாலா சோப் ஸ்தாபனத்தார்

மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றனர். அவரின் பணி தொடர வேண்டும் என்று ஆஞ்சநேயரை வேண்டுகின்றோம்.

லாலாசோப் தொழிற்சாலை,
அச்சுவேலி.

(C/13632)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பிரதமர் கூற்றின் எதிரொலிதான் பண்டாரவளைச் சம்பவமா?

## தேசிய சமாதானப் பேரவை கேள்வி

கொழும்பு,ஒக்.31

விடுதலைப்புலிகள் மீதான இராணுவத் தீர்வே யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு ஒரே வழி என்று தேர்தல் பிரசாரங்களின்போது பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க கூறியிருந்தார். அதன் எதிரொலிதான் பண்டாரவளைப் படுகொலைகளா எனக் கேட்கத் தோன்றுகிறது.

இவ்வாறு தேசிய சமாதானப் பேரவையின் ஊடகத்துறைப் பணிப்பாளர் ஜெகான் பெரேரா கேள்வி எழுப்பியுள்ளார்.

பண்டாரவளைச் சம்பவத்தைக் கண்டித்து தேசிய சமாதானப் பேரவை விடுத்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

கொடூரமாக இடம்பெற்றுள்ள இந்த மனிதாபிமானமற்ற நடவடிக்கை, சட்டத்தை அமுல்படுத்தும் அரச பிரிவுகள் மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையைத் தகர்த்துள்ளது.

மற்றவரைப் பேச்சுவார்த்தை மூலம் மாற்றமுடியாது என்று நம்பும் இலங்கை அரசு - இராணுவத்தீர்வை -இன்று யுத்தத்தை நிறுத்துவதற்குக் கருவியாகக் கையிலெடுத்துள்ளது.

இந்த இராணுவத் தீர்வின் எதிரொலியே பண்டாரவளைப் படுகொலைச் சம்பவமாக இருக்குமோ என்று கேட்கத்தோன்றுகிறது.

இப்படித்தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-8)

## தொழில்நுட்பக் கல்லூரி ஆண்டு இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஒக்.31

யாழ்.தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கான ஆண்டு இறுதிப் பரீட்சைகள் அனைத்தும் அடுத்த மாதம் ஆரம்பமாகின்றன.

நவம்பர் 20 ஆம் திகதி ஆரம்பமாகும் செய்முறைப் பரீட்சைகள் அனைத்தும் டிசெம்பர் 8 ஆம் திகதி வரை நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைகள் டிசெம்பர் 11 ஆம் திகதி ஆரம்பமாகி 27 ஆம் திகதிவரை நடைபெறும்.

இதேவேளை டிசெம்பர் 8 ஆம் திகதி மாணவர்களுக்கான விடுமுறை வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-ரி)

## கிராமசேவையாளர் உட்பட நால்வர் மன்னம்பிட்டியில் கைது

மட்டக்களப்பு,ஒக்.31

வாழைச்சேனை பேரில்லாவெளி கிராமசேவையாளரும், சகோதரர்களான மூவரும் மன்னம்பிட்டி சோதனை நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பில இருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ்ஸை மன்னம்பிட்டியில் வைத்துச் சோதனை செய்த பொலீஸார் இந்த நால்வரையும் கைதுசெய்து விசாரணைசெய்த பின்னர் கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு அனுப்பிவைத்தனர். கிராம சேவையாளரான ஞானமுத்து விவேகானந்தராசா, சகோதரர்களான தம்பிராசா கிரிதரன் (வயது23), சதானந்தன் (வயது 21), சந்திரவதி (வயது25) ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளவர்களாவர்.

### வவுனியாவில் கிளைமோர் தாக்குதல்

வவுனியா மாவட்டத்தில் புதுக்குளம் என்னும் இடத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 6.45 மணியளவில் டிராக்டரில் சென்ற படையினர் மீது விடுதலைப்புலிகள் கிளைமோர் மற்றும் சிறு ஆயுதங்கள் கொண்டு நடத்திய தாக்குதலில் 2 படையினர் கொல்லப்பட்டனர் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (இ-3-8)


SPOKEN ENGLISH
WITH
GRAMMAR

புதிய பிரிவு ஆரம்பம்

01.11.2000 புதன் மாலை 4.30 மணி

WED
MON DAY } 4.30 PM - 5.30 PM

LECTURES BY:-

Mr.M.A.HARI

அனுமதிக்கு முந்துங்கள்

DIRECTOR
HARY 'S INSTITUTE
KONDAVIL EAST, KONDAVIL. (80021)



வட இலங்கை சங்கீத சபை
தேர்வு - 2001

1. மேற்படி தேர்வுக்கான விண்ணப்பப்படிவங்களை 10.10.2000 ஆம் திகதி தொடக்கம் யாழ். மாவட்டத் தேர்வு நாடிகள் சபைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.
2. படிவம் ஒன்றின் விலை 20 ரூபா மட்டும்.
3. சகல தேர்வு நாடிகளும் அறிவுறுத்தலுக்கு அமைவாக விண்ப்பத்தைப் பூரணப்படுத்தி அனுப்பி வைக்கவும்.
4. விண்ணப்ப முடிவு திகதி: 10.12.2000 ஆம் திகதி ஆகும்.

வட இலங்கைச் சங்கீத சபை,
யாழ்.கல்வி வலயம், யாழ்ப்பாணம்.
10-10-2000

திருமதி செ.மகாலிங்கம்
கல்விப் பணிப்பாளரும்,
வட இலங்கைச் சங்கீத
சபைத் தலைவரும்.

(C/13358)



யாழ்ப்பாண சதுரங்க சம்மேளனத்தின்
யாழ்.மாவட்ட சதுரங்க அணிக்கான தெரிவு (ஆண்/பெண்)

மேற்படி சதுரங்க அணிக்கான தெரிவுப் போட்டிகள் அங்கத்தவர்களிடையில் எதிர்வரும் 04.11.2000 சனிக்கிழமை அன்று காலை 9.00 மணிக்கு (S.L.T.) யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகும்.

குறிப்பு: புதிய அங்கத்தவர்களும் சம்மேளனத்தில் இணைந்து, இப்போட்டிகளிற் கலந்துகொள்ளலாம்.

தொடர்பு முகவரி: - செயலாளர்.
திரு. சி.வித்தியாதரன்,
70/1, வைமன் வீதி,
நல்லூர். (80025)


### இயற்றாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு எம்.பி.எம்.ஜி., ஒரு எல்.எம்.ஜி., 16 ரி.56 ஆயுதங்கள் உட்பட தொலைத் தொடர்புக் கருவிகளையும் - படையினர் கைப்பற்றியுள்ளனர் என்று அது மேலும் தெரிவித்துள்ளது.

நாகர்கோவில் பகுதியில் விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவர் சினைப்பர் தாக்குதலில் உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-8)

### மட்டக்களப்பில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்பிரதேசத்தில் பூரண ஹர்த்தாலை அனுஷ்டிக்கவும் ஏற்பாடாகியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அப்பிரதேசத்தில் உள்ள பொது அமைப்புக்கள் இணைந்து இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளன. (இ-3-21)

### கொழும்பு.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேசமயம் - நேற்றிரவு தகவல் திணைக்களம் விடுத்துள்ள செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அசம்பாவிதங்கள் விளைவிப்பதற்கு காரணமாக இருப்பவர்கள், மக்களுக்கு ஆத்திரம் ஊட்டக்கூடிய வகையில் செயற்படுபவர்கள் ஆகியோருக்கு எதிராக பதவி அந்தஸ்து பாராது சட்ட நடவடிக்கை எடுக்கும்படி ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்த நிலையில் -

மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் கைது செய்யப்பட்டுள்ளார் - இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-8)

### மலையகத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களால் தாக்கப்பட்டு பலத்த சேதத்துக்குள்ளாகின.

சேதமடைந்த அந்த வாகனங்கள் இழுத்து வரப்பட்டு நாவலப்பிட்டி பஸ் நிலையத்தில் விடப்பட்டுள்ளன.

கினிகத்தேனையில் இடம்பெற்ற கலகங்களில் இருபதுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். அதில் இருவர் உயிரிழந்ததாக ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவித்தன.

சாமிமலையில் இருந்து மஸ்கெலியா நோக்கி சுமார் 10 ஆயிரம் பேர் ஆர்ப்பாட்ட ஊர்வலமாக வந்தனர். தோட்டத் தொழிலாளர்களும், பொதுமக்களும் இதில் கலந்து கொண்டனர்.

மஸ்கெலியாவுக்குச் செல்ல அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்துப் பொலீஸார் ஊர்வலத்தை வழிமறித்தனர்.

இதை ஏற்காது முன்னேற முயன்றவர்களைத் தடுக்கும் வகையில் பொலீஸார் ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

ஹற்றன், தலாவாக்கொல்லை, டிக்கோயா, கினிகத்தேனை, கொட்டகலை ஆகிய பகுதிகளில் நேற்றுக் காலையிலிருந்து தீவிரமடைந்த மோதல்களை அடுத்து அப்பகுதிகளில் பகல் நேர ஊரடங்கு - நண்பகல் 12 மணி தொடக்கம் அமுல் செய்யப்பட்டிருந்தது. (இ-3)

## நாடாளுமன்ற அமர்வை பகிஷ்கரிக்க ரெலோ அமைப்பு ஆலோசனை!

### பண்டாரவளைச் சம்பவத்துக்கு கண்டனம்

யாழ்ப்பாணம்,ஒக்.31

எதிர்வரும் 9 ஆம் திகதி இடம்பெறும் நாடாளுமன்ற அமர்வைத் தமது அமைப்பு பகிஷ்கரிப்பது குறித்து ஆலோசித்து வருவதாக ரெலோ முதல்வர் என்.ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

பண்டாரவளைத் தடுப்பு முகாமில் இடம்பெற்ற படுகொலைகளைக் கண்டித்தும், சரணடைந்த தமிழ் இளைஞர்களுக்கு பாதுகாப்பு வழங்காததை ஆட்சேபித்தும் தாம் இந்த ஆலோசனையை முன்வைத்துள்ளதாகவும் -

இது குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளுடனும் தாம் கலந்தாலோசிக்கப் போவதாகவும் -

அவர் மேலும் தெரிவித்தார். (இ-8)

### விளக்க மறியல்

யாழ்ப்பாணம்,ஒக்.31

குருநகர் அரச களஞ்சியத்தில் இருந்து 49 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் காணாமல் போனதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக அந்தக் களஞ்சியத்தின் பொறுப்பாளரை விளக்கமறியலில் வைக்கும்படி யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா நேற்று உத்தரவிட்டார்.

இந்தக் களஞ்சியத்தில் இருந்து கடந்த மே மாதம் உணவுப் பொருள்கள் திருடப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட சமயம் நீதிமன்றத்தில் ஆஜரான களஞ்சியப் பொறுப்பாளர் இ.கதிர்காமநாதனை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்ட நீதிவான், பொருள்கள் காணாமல் போனவை தொடர்பாக விசாரணை மேற்கொள்ளுமாறு குற்றப்புலனாய்வுத் துறைக்கு பணிப்புரை விடுத்தார். (இ-3-5)

### புலிகளின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸார் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்துப் பொலீஸார் நடத்திய ஷெல் தாக்குதலில் கறுவாக்கேணியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லால் இளையதம்பி துரையப்பா (வயது 60) என்பவர் உயிரிழந்தார். டிலிமா யோகராசா (வயது 42) என்ற பெண் காயம் அடைந்தார்.

அந்தப் பகுதியில் நான்கு வீடுகள் சேதமடைந்தன. (இ-3-21)

### மட்டக்களப்பு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கங்கள், சந்தைகள் யாவும் செயல் இழந்து நகர் வெறிச்சோடிக்காணப்பட்டது.

மட்டக்களப்பு - கல்முனை வீதி மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதி ஆகியவற்றில் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டதால் போக்குவரத்துக்கள் யாவும் ஸ்தம்பித்திருந்தன.

பாண்டிருப்பில் வீதிகளில் ரயர் போட்டு எரித்த இளைஞர்கள் சிலர் விசேட அதிரடிப்படையினரால் தாக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா,மன்னார் ஆகிய மாவட்டங்களில் புளொட் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஹர்த்தால் காரணமாக சகல அரச அலுவலகங்களும் செயல் இழந்திருந்தன. கடைகள்,சந்தைகள் யாவும் மூடப்பட்டுக் கிடந்தன. பாடசாலைகள் இயங்கவில்லை. போக்குவரத்தும் பாதிக்கப்பட்டிருந்தது.

மன்னாரில் புளொட் இயக்கத்தைச் சேர்ந்த நால்வர் படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். (இ-3-8-21)


NCCA பரீட்சை

NCCA பரீட்சை நெருங்கி விட்ட வேளையில்,
மாணவர்களே உங்களைப் பரீட்சைக்குத் தயார் செய்துவிட்டீர்களா?
கவலையை விடுங்கள்!

முற்றிலும் NCCA பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு
"EASY APPROACH FOR NATIONAL CERTIFICATE IN COMPUTER APPLICATION"
என்னும் நூல் வெளிவந்துள்ளது.

இந்நூல்
☆ NCCA பரீட்சையின் எல்லாப் பாடவிதானங்களையும் உள்ளடக்கியுள்ளது.
☆ பரீட்சார்த்திகள் அனைவரும் இலகுவாகக் கற்கக் கூடியது.

கிடைக்கும் இடங்கள்:-
➤ IIS - யாழ்ப்பாணம், நெல்லியடி, சங்கானை.
➤ மக்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
➤ பொஸ்கோ புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
➤ மொடேண் ஸ்ரோர்ஸ், நெல்லியடி.
➤ வடலங்கா புத்தகசாலை, பருத்தித்துறை.
➤ வலம்புரி புத்தகசாலை, வட்டுக்கோட்டை. (C/13635)



இலவசம்
கணனிப் பயிற்சி நெறிகள்

★ முதலில் அனுமதி பெறும் 200 நபர்களுக்கு இலவசமாகக் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ஏனையயோருக்கு மிகக் குறைந்த கட்டணம்)

Note:- அனேகமானவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அனுமதி பெறும் மாணவர்கள் எண்ணிக்கை 250 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

★ பாடசாலை செல்லும் மாணவர்கள், பாடசாலை விட்டு இடைவிலகியோர், தொழில் புரிவோர் மற்றும் கணனிக் கற்கையில் ஆர்வமுடையோர் அனைவரும் இணைந்து கொள்ளலாம்.
(வய தெல்லை கிடையாது)

★ விண்ணப்பப்படிவத்தையும், பாட அலகுகளையும் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

முந்துங்கள் இச்சலுகை இப்பிரிவுக்கு மட்டுமே!
விண்ணப்ப முடிவு திகதி:- 06.11.2000

தொடர்புகளுக்கு:-
AJAY COMPUTER INSTITUTE
சங்கரப்பிள்ளை வீதி,
(மூத்தவிநாயகர் கோவிலுக்கு அண்மையில்)
ஆனைக்கோட்டை, மானிப்பாய்.
(80020)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.10.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.